விலை ரூபா: 5.00 பக்கங்கள் பத்து Registered as a News paper in Sri Lanka

வலம்புரி
VALAMPURI

றெனி மூக்குக் கண்ணாடி அகம்
கண் பரிசோதித்து கண்ணாடி வழங்குபவர்கள்
540, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

RENNY

சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 மாசி 16 வியாழக்கிழமை (28.02.2002) தொலைபேசி 3378 ஒலி 71

# கண்காணிப்புக் குழுவின் தலைவர் அன்ரன் பாலசிங்கத்துடன் பேச்சு

## சனிக்கிழமை கொழும்பு வருவார்

(லண்டனில் இருந்து எமது நிருபர்)

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நிரந்தர யுத்த நிறுத்தம் தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் குறித்து லண்டனில் உள்ள புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்துடன் நோர்வேயின் விஷேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் மற்றும் யுத்த நிறுத்தத்தை கண்காணிக்கும் சர்வதேச கண்காணிப்புக் குழுவின் தலைவரும் நோர்வேயின் முன்னாள் இராணுவ அதிகாரியுமான மேஜர் ஜெனரல் ரொன்ட் பியூரு ஹெர்வ்டே ஆகியோர் நேற்று பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையே ஏற்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தம் தொடர்பாகவும், நிரந்தர யுத்த நிறுத்தம் தொடர்பாகவும் நோர்வேத் தூதுக்குழுவினர் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தினர்.

இப் பேச்சுவார்த்தையின் போது நோர்வேத் தரப்பில் நோர்வேயின் சிறப்புத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம், கண்காணிப்புக் குழுவின் தலைவரும் நோர்வேயின் முன்னாள் இராணுவ அதிகாரியுமான மேஜர் ஜெனரல் ரொன்ட் பியூறு ஹெர்வ்டே ஆகிய இருவரும்

(10ம் பக்கம் பார்க்க)

# புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ரத்துச் செய்வதாகக் கூறவில்லை

## ஜனாதிபதி மறுப்பு

(கொழும்பு)



அரசுக்கும் புலிகளுக்கும் இடையே ஏற்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ரத்துச் செய்ய என்னால் முடியும் என நான் தெரிவித்ததாக தகவல் ஊடகங்கள் வெளியிட்ட செய்திகளை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா மறுத்துள்ளார்.

இது தொடர்பாக ஜனாதிபதி விடுத்த அறிக்கையில் இந் நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளை ஆரம்பித்தது நானே அப்படியிருக்கும் போது சமாதான முயற்சிகளை நான் எப்படிக் குழப்ப முடியும்.

இனப்பிரச்சினைக்கு சமாதானப் பேச்சுவார்த்தை மூலமே தீர்வு காணப்பட வேண்டும். இது தான் எனது நிலைப்பாடாகும். அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தம் தொடர்பாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க குழு ஒன்றை நியமித்துள்ளேன். அந்தக் குழு தனது அறிக்கையை சமர்ப்பித்த பின்னரே ஒப்பந்தம் தொடர்பாக எனது நிலைப்பாட்டை வெளியிடுவேன். எனினும் ஒப்பந்தத்தில் சில விரும்பத்தகாத விடயங்கள்

(10ம் பக்கம் பார்க்க)

## 10 இந்திய மீனவர் கைது

(யாழ்ப்பாணம்)

காங்கேசந்துறைக் கடற்பகுதியில் அத்துமீறி நுழைந்து மீன் பிடித்த பத்து இந்திய மீனவர்களை கடற்படையினர் கைது செய்து ஊர்காவற்றுறைப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். கடந்த திங்கட்கிழமை கைது செய்யப்பட்ட இம் மீனவர்களை

(10ம் பக்கம் பார்க்க)

## கொழும்பிலும் அடுத்த வாரம் பொங்கு தமிழ் எழுச்சி

(கொழும்பு)

தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமையை வலியுறுத்தி பொங்கு தமிழ் எழுச்சியை கொழும்பில் நடத்துவதற்குப் பல்வேறு தமிழ் அமைப்புகள் ஏற்பாடுகள் செய்து வருகின்றன.

மட்டக்களப்பு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளிலும் பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வுகள் நடந்துள்ளன. இதனைத் தொடர்ந்து அடுத்த வாரமளவில் கொழும்பில் பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வு நடைபெறவுள்ளதாக இதன் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (வ)

உள்ளே...

5ந் தர மாணவர்களுக்கான புலமைப்பரீட்சை மாதிரி வினாத்தாள் - விடைகள் - அதிகூடிய புள்ளி பெற்ற மாணவர்களின் விபரங்கள்

## கண்காணிப்புக் குழுவில் இடம்பெறும் புலிகளின் பிரதிநிதிகள் விபரம் ஒருசில தினங்களில் வெளிவரும்

### கரிகாலன் தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

நிரந்தர யுத்த நிறுத்தக் கண்காணிப்பில் ஈடுபடும் கண்காணிப்பாளர் குழுவில் விடுதலைப் புலிகள் சார்பில் இடம் பெற இருக்கும் பிரதி நிதிகளின் பெயர் விபரம் இன்னமும் ஒரு சில தினங்களில் நோர்வே அரசுக்கு அனுப்பி வைக்கப் படும்.

இவ்வாறு மட்டு - அம்பாறை அரசியல் துறைப் பொறுப்பாளர் கரிகாலன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு கொக்கட்டிச் சோலையில் வைத்து இத் தகவலை தெரிவித்த கரிகாலன் கண்காணிப்புக் குழுவில் புலிகள் சார்பில் இடம் பெறும் பிரதிநிதிகள் பொது மக்கள் தரப்பிலிருந்தே தெரிவு செய்யப்படுவர் என்றும் தெரிவித்தார். (ந)

## புரிந்துணர்வு ஒப்பந்தத்தை எதிர்க்க சிஹல உறுமய – ஜே.வி.பி கூட்டு

(கொழும்பு)

இனவாதக் கட்சிகளான சிஹல உறுமயவும் ஜே.வி.பியும் இணைந்து செயற்பட முடிவு செய்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் கையொப்பமிட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தை முறியடிப்பதற்காக தாம் கட்சி வேறுபாடுகளை மறந்து ஜே.வி.பியுடன் இணைந்து செயற்பட தயாராக இருப்பதாகவும் கட்சி வேறுபாடுகளிலும் பார்க்க நாட்டு நலனே முதன்மையானதாக இருப்பதாகவும் சிஹல உறுமயவின் பிரசார செயலாளர் உதய கம்மனபில தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனுடன் செய்து கொண்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தை செல்லுபடியற்றதாக்குவதற்கு தாம் சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் தடை செய்யப்பட்ட ஓர் அமைப்புடன் அரசாங்கம் முறைப்படி ஒப்பந்தம் ஒன்றை செய்ய முடியாதெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். இதேவேளை ஜனாதிபதி தனது நிறைவேற்று அதிகாரத்தை பயன்படுத்தி புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ரத்துச் செய்ய வேண்டும் என்பதை வலியுறுத்தி நாளை மறுதினம் கொழும்புக் கோட்டை ரயில் நிலையத்தில் இருந்து ஜனாதிபதி மாளிகை வரை ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடத்த சிஹல உறுமய திட்டமிட்டுள்ளது.

இப் புரிந்துணர்வு ஒப்பந்தம் மக்களின் அடிப்படை உரிமைகளை மீறுகிறதென சுட்டிக்காட்டி நெதர்லாந்து நாட்டின் ஹேக் நகரில் அமைந்துள்ள சர்வதேச நீதிமன்றத்திலும் வழக்குத் தொடர சிஹல உறுமய முடிவு செய்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (இ)

## பதில் பொலிஸ் மா அதிபராக ஆனந்தராஜா நியமனம்

(கொழும்பு)

சிரேஸ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஆனந்தராஜா பதில் பொலிஸ் மா அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

பொலிஸ் மா அதிபர் லக்கி கொடித்துவக்கு சுகயீனம் காரணமாக சிகிச்சைக்காக வெளிநாடு சென்றுள்ளமையால் அவரது இடத்திற்கு ஆனந்தராஜா பதில் பொலிஸ் மா அதிபராக நியமனம் பெற்றுள்ளார். (வ)

## புரிந்துணர்வு ஒப்பந்த அறிக்கை ஜனாதிபதியிடம் நேற்று கையளிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்குமிடையே ஏற்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் காணப்படும் குறைபாடுகள் குறித்து ஆராய்வதற்காக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட சட்ட வல்லுநர் குழு அது தொடர்பான அறிக்கையை நேற்று ஜனாதிபதியிடம் கையளித்தது.

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் தலைமையிலான சட்டவல்லுநர் குழு, புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ள சரத்துக்களில் விடுதலைப் புலிகளுக்குச் சாதகமாக அமைந்துள்ள சரத்துக்கள் எவையென ஆராய்ந்துள்ளதாக குழுவில் இடம் பெற்ற சட்டவல்லுநர் ஒருவர் தெரிவித்துள்ளார். (ந)

## உண்ணாவிரதக் கைதிகளில் மேலும் இருவர் மயக்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ் சிறைச்சாலையில் சாகும் வரை உண்ணாவிரதம் இருந்து வரும் எட்டுச் சிங்களக் கைதிகளில் மேலும் இருவர் நேற்று உடல் சோர்ந்து மயக்கமடைந்த நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

யூயி குணவர்த்தன (வயது 25) டி.எல்.ஏ.ஜயசிங்ஹ (வயது 33) ஆகிய இருவருமே மயக்கமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள சிறைக் கைதிகளாவர்.

இதேவேளை உண்ணாவிரதக் கைதிகள் நேற்றுப் படை உயரதிகாரிகள் வழங்கிய உறுதிமொழியை அடுத்து உண்ணாவிரதப் போராட்டத்தைக் கைவிட்டுள்ளதாக சிறைச்சாலை

(10ம் பக்கம் பார்க்க)

## சிறுவிளம்பரம்

### காணவில்லை

நாணயம் குற்றப்பட்ட சிவப்பு நிற பசு மாடு (ஊர் மாடு) ஒன்றை வியாழக்கிழமையிலிருந்து (21.2.2002) காணவில்லை கண்டவர்கள் கதிரேசன் கோயில் சே. சே. எஸ். வீதி என்ற முகவரிக்கு உடனடியாக அறிவிக்கவும், சன்மானம் வழங்கப்படும்.

(சி-3590)

### மணமக்கள் தேவை

1969,1966.1971. 1976, 1968-1967• 1964: 1970- ஆண்டுபிறந்த அரச உத்தியோகத்தர்களிற்கும் 1954'1961 கடைக்காரருக்கும் 1964-1974:1976:1971ல் வெளிநாடுபொன்சர் உண்டு மணமகள் தேவைபதிவுகள்யாவும் இலவசம்

தினசரி-09.30-05.30

தொடர்பு-பொ.கேதீஸ் கடை அம்பாள் திருமண சேவை,419 கோவில் வீதி நல்லூர் (கி-3604)

## வீடியோ படக்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக புறநிலைப்படிப்புகள் அலகும் திரைப்பட வட்டமும் இணைந்து வழங்கி வரும் திரைப்படக் காட்சித் தொடரில் CARLOS SAURA இயக்கிய ஆங்கில உபதலைப்புகளுடன் கூடிய ஸ்பானிஷ் மொழித் திரைப்படமான 'OUTRAGE' எதிர் வரும் சனிக்கிழமை மு.ப 10. 00 மணிக்குபுவியியற்றுறை மண்டபத்தில் காண்பிக்கப்படவுளது.

ஆர்வலர்கள் எவரும்கலந்து கொண்டு பயன் பெறலாம் என புறநிலைப்படிப்புகள் அலகின் இணைப்பாளர் அறிவித்துள்ளார். (உ)

### சாரணர் நாள்

(யாழ்ப்பாணம்)

யூனியன் கல்லூரி நடத்தும் உலக சாரணர் நாள் நாளை காலை9.00 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் சாரணத் தலைவர் க. ஸ்ரீகந்தவேள் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில், பிரதம விருந்தினராகமாவட்ட ஆணையாளர் ந. சௌந்தரராஜனும் கௌரவ விருந்தினர்களாக கல்லூரி அதிபர் சு. புண்ணியசீலன், உபஅதிபர் வே. வில்லவராஜன் மற்றும்சிறப்புவிருந்தினராக செயற்குழு தலைவர் நா. ...பாஜன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

(உ-3)

# யாழ்ப்பாண இளைஞர்களின் எதிர்கால வளமான வாழ்வுக்கு வழிவகை செய்வோம்

## மூன்றாம் நிலைக் கல்வியமைச்சர் உறுதியளிப்பு

(தென்மராட்சி)

எனது அமைச்சின் செயற்திட்டங்களில் தென்பகுதிக்கு கிடைக்கும் சலுகைகள், உரிமைகள் அத்தனையும் யாழ்ப்பாணத்திற்கும் கிடைக்க வழிவகை செய்யப்படும்.

மாற்றாந்தாய் மனப்பான்மை என்ற பேச்சுக்கே இடமில்லை. இதில் எவரும் ஐயம் கொள்ளத் தேவையில்லை.

இவ்வாறு யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்திருந்த மூன்றாம் நிலைக் கல்வி அமைச்சர் ஹபீர் ஹசீம் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் கைலாசபதி கலையரங்கில் நேற்று முன்தினம் இடம்பெற்ற உயர் கல்வி குறித்த கலந்துரையாடலில் தெரிவித்தார்.

யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இக் கலந்துரையாடலில் மாவட்டத்திலுள்ள உயர் கல்வி நிறுவனங்கள், உயர்தரப்பாடசாலைகள், கல்வித் திணைக்கள உயர் அதிகாரிகள் மற்றும் பல்கலைக்கழக சமூகத்தவர்களும் பங்கு கொண்டிருந்தனர். உயர் கல்வி அமைச்சர் ஹபீர் ஹசீம் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

யாழ்ப்பாண விஜயத்தை மிகவும் பயனுள்ள விஜயமாக்குவதே எனது விருப்பமாகும். வெறும் வெட்டிப் பேச்சுக்களில் எனக்கு நம்பிக்கையில்லை. செயல்பாடுகளிலேயே எனக்குப் பூரணமான நம்பிக்கையுண்டு. அதுபோலவேதான் எமது பிரதமரும் நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கே அவர் உயர்தர முன்னுரிமை கொடுத்து வருகின்றார். சமாதானத்தை நோக்கிய பயணத்துக்கே முன்னுரிமை அளிக்கும்படியும் கேட்டு வருகிறார்.

யாழ்ப்பாண இளைஞர்களின் எதிர்கால வளத்துக்கும் வாழ்வுக்கும் பூரணமான ஒத்துழைப்புக்களை வழங்குவோம். நாம் செயல்பாட்டில் மட்டுமே நம்பிக்கை கொண்டவர்கள். குறுகிய காலத்தில் நல்ல அறுவடையைச் செய்ய வேண்டும் என்ற நோக்கில் எமது அடிகளை எடுத்து வைத்து வருகின்றோம்.

எனக்கு கிடைத்த உயர் கல்வி அமைச்சு மூலம் இந்த நாட்டில் இருக்கின்ற இளைஞர்களுக்கு விசாலமான சேவை செய்யலாம் என்ற நம்பிக்கை உள்ளது.

மேலும் யுத்தம் காரணமாக அழிந்த நிலையிலுள்ள வடக்கு கிழக்கினை அது முன்பு எப்படி இருந்ததோ அதுபோல ஆக்க வேண்டும். மிகக் குறிப்பாக உயர்கல்வி மற்றும் தொழில் கல்வி முறைகளில் பல புதிய மாற்றங்களை விரைவில் அறிமுகம் செய்யவுள்ளேன் இன்று இருக்கின்ற தொழில்கல்வி, உயர்கல்வி முறைகள் மிகவும் பழமை வாய்ந்தவை. இவற்றினை நவீன உலகிற்கு ஏற்ப அமைக்க வேண்டும்.

நாட்டின் தொழில் நுட்பக் கல்வியிலும், பல்கலைக்கழகக் கல்வியிலும் மாற்றங்களைக் கொண்டு வருவதன் மூலமே எமது இளைஞர்கள் தொழில் சந்தையில் தொழிலை இலகுவில் பெறக் கூடிய நிலைமை ஏற்படும்.

இன்று தொழில் நுட்பக் கல்லூரிகளில் பயில்கின்ற மாணவர்களுக்கு வழங்கப்படுகின்ற சான்றிதழ்களில் எத்தகைய பிரயோசனமும் இல்லை. இதனால் இளைஞர்கள் தொழில்வாய்ப்புக்களைப் பெறமுடியாமல் அவதிப்படுகின்றனர்.

இந்த நாட்டில் மூவின மக்களும் சமாதானமாகவும், அமைதியாகவும் வாழக்கூடிய நிலை விரைவில் உருவாக வேண்டும் எனக்குறிப்பிட்டார்.

இக் கலந்துரையாடலுக்கு முன்பதாக உயர் கல்வி அமைச்சர் ஹபீர் ஹசீம் பல்கலைக்கழக கூட்டமண்டபத்தில் துணைவேந்தர், பீடாதிபதிகள், பதிவாளர் மற்றும் பேராசிரியர்களைச் சந்தித்து பல்கலைக்கழகத்துக்கான தேவைகள் குறித்து சுமார் ஒரு மணித்தியாலம் பேச்சுவார்த்தை செய்திருந்தார்.

அமைச்சருடன் அமைச்சின் செயலாளர், மற்றும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் மெண்டிஸ், ஆணைக்குழு உறுப்பினர் பேராசிரியர் அருட்பிரகாசம் ஆகியோரும் வருகைதந்திருந்தனர்.

இந்து கலாச்சார அமைச்சர் தி. மகேஸ்வரன், யாழ். மாவட்ட அரச அதிபர் க. சண்முகநாதன், தமிழர் கூட்டமைப்பு எம்.பி. மாவை. சேனாதிராஜா ஆகியோரும் இக்கலந்துரையாடல்களில் சமுகமளித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

(உ-77-59)


## பனை அபிவிருத்திச் சபை, மாபெரும் பனைவளக் கண்காட்சி

எதிர்வரும் சித்திரை மாத நடுப்பகுதியில் மாபெரும் பனைவள உற்பத்திப் பொருள் கண்காட்சி ஒன்று யாழ். மத்திய கல்லூரியில் நடாத்துவதற்கு பனை அபிவிருத்தச் சபை தீர்மானித்துள்ளது.

இக் கண்காட்சி பாடசாலை மாணவர்களினதும், இவ்வளம் தொடர்பான உற்பத்தியாளர்களின் நன்மை கருதியும், செய்முறைக் கண்காட்சியாகவும் நடைபெறும்.

இக் கண்காட்சியில் பனைசார் உணவு உற்பத்தி, பனை சார்ந்த கைப்பணி உற்பத்தி, பனைமர உற்பத்தி எனத் தனித்தனியாக காட்சி அறைகள் அமைக்கப்படும். தரமான உற்பத்திகளுக்கு ஒவ்வொன்றிலும் (03) மூன்றிற்கு குறையாத பரிசில்களும், ஏனைய பங்குபற்றும் ஸ்தாபனங்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்படும்.

இக் கண்காட்சியில் கலந்து கொள்ள விரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளவும்.

தலைமைக் காரியாலயம்,
53, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
(C-3597)

பொ. சிவபாதம்
தலைவர்
பனை அபிவிருத்திச் சபை.


# தமிழருக்கு எதிரான சிங்களபேரினவாத கட்சிகளுடன் கூட்டுச்சேர்வதில்லை

## பத்திரிகையாளர் மாநாட்டில் ஜெகன்

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களுக்கு எதிரான சிங்களப் பேரினவாதக் கட்சிகளுடன் நாங்கள் எப்போதுமே கூட்டு வைத்திருக்கப் போவதில்லை.

எம் வசமுள்ள ஆயுதங்கள் நாட்டின் சமாதானம் பாதிக்கப்படக் காரணமாய் அமையுமாயின், அதை அரசிடம் கையளிக்க எந்நேரமும் தயங்கமாட்டோம்.

நேற்றைய தினம் ஸ்ரான்லி வீதியில் உள்ள ஈழமக்கள் ஜனனாயகக் கட்சியின் அலுவலகத்தில் இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் கட்சியின் யாழ் மாவட்ட அமைப்பாளர் ஜெகன் இவ்வாறு குறிப்பிட்டார்.

பத்திரிகையாளர் பத்தியில் அவர் கட்சியின் நிலைப்பாடு தொடர்பாக மேலும் விளக்கிக்கூறுகையில்,

நாங்கள் எப்போதுமே சமாதானத்திற்கு எதிரானவர்கள் அல்லர். சமாதானத்தை நாட்டில் ஏற்படுத்துவதற்காகப் பாடுபட்டும் வருகின்றோம்.

நாங்கள் ஆயுதங்களை சொந்தப் பாதுகாப்புக்காக மட்டுமே வைத்திருக்கின்றோம். அதைக்கொண்டு மக்களுக்கு எதிரான எந்த நடவடிக்கையிலும் ஈடுபட்டது கிடையாது. அரசு எமது பாதுகாப்பை உறுதிப்படுத்தினால் ஆயுதத்தின் தேவை எமக்கு இருக்காது.

இராணுவத்துடன் இணைந்து செயற்படும் நோக்கம் இன்றுவரை எமக்குக் கிடையாது.

ஆயுதக் கலாசாரத்தை நாம் கைவிட்ட பின்னர் விடுதலைப் புலிகளுக்கோ பொதுமக்களுக்கோ எதிராகச்செயற்பட்டதில்லை என்று குறிப்பிட்டார்.

விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்குமிடையே ஏற்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தம் தொடர்பாக கருத்துக் கூறுகையில்,

இவ் ஒப்பந்தத்திற்கு எதிராக நாம் வழக்குத் தொடரப்போவதாக வெளியான செய்திகள் வெறும் வதந்தியே அன்றி அதில் உண்மை எதுவும் இல்லை, திட்டமிட்டு எம்மை ஓரம்கட்டும் நடவடிக்கையில் இதுவும் ஒன்று.

மாறாக இப் புரிந்துணர்வு உடன்படிக்கையில் உள்ள குறைபாடுகளை பிரதமருக்கு நேரடியாகச் சுட்டிக்காட்டி அதனை நிவர்த்தி செய்வது தொடர்பாக ஆலோசித்து வருகிறோம் என்றார்.

மேலும் விடுதலைப் புலிகள் அரசியலில் ஈடுபடும் ஓர் அமைதியான சூழ்நிலை ஏற்பட்டால், அவர்களுக்கு வழிவிட்டு நாம் விலகிக்கொள்ளவும் தயாராகவுள்ளோம் என்று குறிப்பிட்டார். (உ-10)

## இந்து சமய

சமய சமூக உணர்வை திகழ வைத்த பெருமை அமரர் மகாலிங்கத்தையே சாரும் தாய் தந்தையரை இழந்த ஏழைப்பிள்ளைகளும் ஆதரவற்றவர்களும் வாழ்வதற்கு தம்மால் இயன்றவற்றை உதவ வேண்டும் என்ற கருத்தை மக்கள் மத்தியில் ஓரளவு நிலைக்கச்செய்தவர் இவரே.

...ாற்றடிக்கும் பக்கம் நீதி நேர்மைகளை ஒதுக்கி விட்டு நின்று கூத்தாடுபவர் அல்லர். நேர்மையைப் பறிகொடுத்து பெறும் இலாபம் உண்மையில் நஷ்டமே என்பதை உணர்ந்தவர். இந்த நாட்டில் இன்று சமாதானக் காற்று வீசுகின்ற தென்றால் அத் தென்றலின் அசைவிற்காக அமரர் மகாலிங்கத்தின் பங்களிப்பு கணிப்பிடத்தக்க வகையில் உள்ளதென்பதை உலகம் தனது காலக்கண்ணாடியில் பதித்தே தீரும்.

படிப்பை கைவிடாத பெருமை மிக்கவர் அமரர் மகாலிங்கம் ஆங்கிலம், தமிழ், சமஸ்கிருதம், சிங்களம் போன்ற மொழிகளில் நல்ல பாண்டித்தியம் பெற்றவர். சரளமாகப்பேசவும், நயமாக எழுதவும் வல்லவர். பட்டதாரியான இவர் பட்டப்பின் படிப்பை (நிர்வாகத்துறையில்) யாழ். பல்கலைக்கழகத்தில் மேற்கொண்டு நிறைவு பெறும் வேளையில் இவருக்கு மரணம் சம்பவித்தது. இவர் இறக்கும் வரையும் படிப்பை கைவிடாத தனித்துவத்தை எடுத்துக்காட்டுகின்றது. ஒருவன் உள்ளுணர்வு உள்ள தெய்வசிந்தையுடன் தர்மவானாக உண்மை ஒளி பிரகாசிக்க அன்புள்ளவனாக வாழவேண்டும் என்பார் அமரர் மகாலிங்கம் இந்த உண்மையை அறிந்து வாழ்வதே அமரர் மகாலிங்கம் அவர்களுக்கு நாம் செலுத்தும் அஞ்சலியாகும்.

### கருத்தரங்கு

உயர்தர பரீட்சைக்கு 2002 இல் தோற்றும் மாணவர்களின் நலன் கருதி யாழ். ஸ்கந்தவரோதயகல்லூரியின் கலை, வர்த்தக மாணவர் மன்றத்தின் ஏற்பாட்டில் நாளை காலை 9.30மணிக்கு பொது 'உளச்சார்பு' பற்றிய கருத்தரங்கு நடைபெறவுள்ளது

ஆசிரியர் அ. குமாரவேல் கருத்துரையை வழங்கவுள்ளார். (எ-5)

### வைத்தியசாலையில்

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

நாளை மறுதினமும் யாழ். போதனா வைத்தியசாலையில் நடத்தத்திட்டமிட்டுள்ளதாகவும்,

இந்த மருத்துவசிகிச்சையை புற்று நோய் தொடர்பான விசேட வைத்தியர் ஜயந்த பாலர்த்தன மேற்கொள்வார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

### பணப் பரிசில் வழங்கப்பட்டது

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் திறமையாகச் சித்தியடைந்த 5 மாணவர்களுக்கு நேற்றையதினம் வர்த்தக வங்கியின் யாழ். கிளையின் முகாமையாளர் எஸ். ரவீந்திரராசாவினால் பணப்பரிசில்கள் வழங்கப்பட்டன.

வங்கியில் இடம்பெற்ற இந் நிகழ்வில் லயன்ஸ் கழகப் பிரமுகர்கள் பலர் கலந்து கொண்டனர்.

எம். விஜி பிலாவத்தை ஏ. எம். ரி. எம். பாடசாலை, எஸ். சுகந்தாயினி - கந்தரோடை தமிழ் வித்தியாசாலை, எஸ். மேரி ஜீவனா - சில்லாலை றோ. க. த. க. பாடசாலை, எஸ். ரக்சிகா, யாழ். இந்துமகளிர் ஆரம்ப பாடசாலை கே. அபர்ணா - யாழ். இந்து ஆரமபபாட ஆகியோரே மேற்படி பணப் பரிசிலைப் பெற்றுக்கொண்டனர்.

(உ-19)

# அரம் போன்ற கூர்மையான அறிவுடையாரும் மக்கட் பண்பில்லாவிடில் மனிதரேயாகார்



## இன்று திருவள்ளுவர் குருபூசை தினம்

'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ்கொண்ட தமிழ் நாடு' - பாரதியார்

திருவள்ளுவம் தமிழர்களின் பொதுச் சொத்து, காலவர்த்தமான பரிமாணங்களைக் கடந்து என்றும் நிலைத்திருக்கும் சிந்தனைக் கருவூலத்தின் பெட்டகம் திருக்குறள். இன்றைய இளைஞர்களுக்கு வழிகாட்டுவதற்கு திருக்குறளை விடச் சிறந்த இலக்கியம் ஏதும் இல்லை எனத்துணிந்து கூறமுடியும்.

**எச்சம் என்பது**

திருவள்ளுவர் பற்றிய புனைகதைகள் கணக்கிலடங்கா! அவருடைய வரலாறு எதுவாக இருப்பினும் அவர் தந்த திருக்குறள் உலக இலக்கியம் ஆகும். பைபிள், கூர்ஆன், திருக்குறள், இம் மூன்றும் அதிகளவில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. வள்ளுவர் நினைவு நாளில் அவரது சில குறள்கள் தரும் அரிய கருத்துக்களை சிந்திக்கலாம்.

தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தாற் காணப்படும்
-குறள் 114

நடுவு நிலைமை எனும்அதிகாரத்தில் காணப்படும் இக்குறள் இன்றைய 'பொது நலத் தொண்டர்களுக்கு' உரியது ஆகும். அனைவரையும் சமமாகக் கருதும் மனச் செம்மை உடையவர் அல்லது இல்லாதவர் என்பதை அவர் பெற்ற பிள்ளைகள் மூலமே அறிந்து கொள்ளலாம் என இக் குறளுக்கு பொருள் காண்பது ஏற்புடையதா எனச் சிந்திக்க வேண்டும். நல் மக்களைப்பெறும் சிறப்புப்பற்றி மக்கட் பேறு எனும் அதிகாரத்தில் கருத்துக் கூறிய ஐயன், மேற்குறிப்பிட்ட குறளை நடுவு நிலைமையில் முன்மொழிந்திருப்பதைக் கருத வேண்டும் 'எச்சம்' என்பதை பிள்ளைகள் என்று பொருள் கொள்ளாமல் 'விடப்பட்டவை' எனப் பொருள் கொள்வோமாயின் ஒருவர் உண்மையான பொது நலத்தொண்டனா? என்பதை அவர் சமூகத்திற்குசெய்தகாரியங்களில் இருந்து அறிந்து கொள்ளலாம் என முடிவு செய்யலாம் முறைதவறி நடப்பதால் வரும் செல்வம் நல்ல காரியத்திற்கே பயன்படுவதாக இருந்தாலும்கறைபட்ட அச்செல்வத்தைஅப்பொழுதே கைவிட வேண்டும் எனவும், (குறள் 113) வறுமையும் செல்வமும் வாழ்வில் இல்லாதனஅல்ல, ஆகையால் அவற்றைமுன்னிட்டு மனம் தடுமாறாமல் செம்மையாக வாழ்வதே நடுநிலைமைக்கு அழகாகும்எனவும் (குறள் 115)

கருத்துக் கொண்ட குறள்களுக்கு நடுவில் தக்கார் தகவிலர்... எனும் குறள் அமைந்திருப்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். எனவே பொதுநலத் தொண்டர்களின் தகைமை அவர்கள் சமூகத்திற்குச் செய்யும் நல்ல காரியங்களினால் தீர்மானிக்கப்படும் என்பதே வள்ளுவர் கூற விளைந்த கருத்தாகும்.

**அரம் போலும் கூரியர்**

'அரம்போலும் கூர்மையரேனும், மரம் போல்வர்
மக்கட் பண்பு இல்லா'தவர்
- குறள் 997

இக்குறள் அரத்தைப் போல கூரிய அறிவு இருந்தாலும் மக்கட் பண்பு இல்லாதவர்கள், மரத்தைப் போன்றவர்களே ஆவர் எனக் கூறுகிறது. இதில்'அரம்போலும்' எனும் சொல்லை உற்றுநோக்க வேண்டும். அரம் எனும் கருவி கூரியது. அதே நேரத்தில் மற்றையவற்றைக் கூர்மையாக்கவும் பயன்படும். கல்விமான்கள் கூரிய அறிவு படைத்தவர்கள். அவர்கள் தம் மாணாக்கரைக் கூர்மைப் படுத்தும் பணியையும் செய்பவர்கள். எனவே, அரம் போலும் எனும் உவமை ஆசிரியர்கள், பேராசிரியர்கள் போன்றவர்களைச் சுட்டுறெது. இளம் சமுதாயத்தினை வழிப்படுத்தும் பெரும் பொறுப்பை ஏற்றுள்ள ஆசிரியர்களும், பேராசிரியர்களும் பலரோடும் நன்கு பழகும் பண்புடைமை கொண்டிருக்க வேண்டியதன் அவசியத்தை வள்ளுவர் ஈரடிகளில் குறிப்பிட்டிருக்கிறார் போலும்.

**நட்பு**

'நகுதற் பொருட்டன்று,
நட்டல், மிகுதிக்கண்
மேற்சென்று இடித்தற்
பொருட்டு.'
- குறள் 784

நட்பு சிரித்து மகிழ்வதற்கும் மட்டுமல்ல, நண்பனிடம் தவறுகாணும் பொழுது இடித்துரைத்து அவனை நேர் வழியில் இட்டுச் செல்வதற்கும் பயன்படவேண்டும் என்பது குறளின் கருத்தாகும். இன்றைய இளைஞர்கள் இக்குறள் கூறும் கருத்தை தம் சிந்தனைக்கு எடுத்து நண்பர்களைத் தேடிக்கொள்ள வேண்டும். ஒருவனுடைய வாழ்வின் உயர்வுக்கும், தாழ்விற்கும் நண்பர்கள் தான் காரணம். தீயவழியில் சென்றால் தடுத்து நிறுத்தி நல்ல வழிக்கு வழிகாட்டுபவனே நண்பன் ஆவான்.

**காதலும் காமமும்**

டாக்டர் மு. வரதராசன் தம் நூல் ஒன்றில் குறிப்பிடுகிறார். வெல்லக்கட்டியை நோக்கிவரும் எறும்புகள் வெல்லக்கட்டியை சூழ்ந்து கொண்டு உணவைத்தேடும், அதன் மேல் சிறுகல் ஒன்றை இட்டால் வந்த வழியே எறும்பு ஓடும். இந்த எறும்பு போன்றவர்களை நண்பனாகக் கொள்பவன் வாழ்வு மலருவதில்லை. மு. வ. வின் இக்கருத்தை 2000 ஆண்டுகளுக்கு முன்னரே வள்ளுவர் கூறியிருக்கிறார் என உணரும் பொழுது, வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து. . .என்று புரட்சிக் கவி புகழாரம்சூட்டுவதில் வியப்பென்ன இருக்க முடியும்?

கண்ணொடு கண் இணை
நோக்கு ஒக்கின்,
வாய்ச்சொற்கள் என்ன
பயனும்இல. குறள் 1100

காதல் கொண்டவர்களின் பார்வை ஒன்றோடு ஒன்று கலந்த பின்னர் வாய்ப் பேச்சு என்ன பயனைத் தரப்போகிறது என வினா எழுப்புகிறார் வள்ளுவர். சங்ககாலத்தில் காதல், காமம் எனக் கூறப்பட்டது. இன்று காதல், காமம் என்பவை வேறுபட்ட நிலைகளை உணர்த்தும் சொற்களாகும். உடல் இச்சையால் உருவாவது காமம், உள உணர்வினால் ஏற்படுவது காதல் எனக் கருதலாம். கண்ணொடு கண் நோக்கும் பொழுது இருவரிடத்திலும் தோன்றுவது காதலா? காமமா? என்பதை இருவரும் அறிந்து கொள்ள வேண்டும். காமம் ஏற்படுத்தும் உறவு நீதிமன்றத்தில் முடிவுறுகிறது, ஆனால் காதல் ஏற்படுத்தும் உறவு முடிவுறாத தொடர்கதையாகும்.

**கவியரசு**

பின்னால் வந்த கவியரசு கண்ணதாசனும் தன் பங்கிற்கு 'நான்பேச நினைப்பதெல்லாம் நீபேச வேண்டும். . .' எனப்பாடிச் சென்றுள்ளார். இன்றைய இளைஞர்களாக இருக்கும் இருபாலாரும் இவற்றை நன்கு அறிந்து நடக்க வேண்டும். இன்றைய திரைப்படங்களில் வரும் விரசப் பாடல்களினால் திசைமாறிச் செல்லாமல் வாழ்வைச் செம்மைப்படுத்திக் கொள்ள வேண்டும். இந் நோக்கை அடையத் திருக்குறள் படியுங்கள்.

கற்றதனால் ஆயபயன்
என்கொல்? வால் அறிவன்
நற்றாள் தொழாஅர்
எனின்-குறள் 2

நல்ல அறிவையும் பண்பையும் தரக் கூடிய கல்வியைக் கற்று தூய அறிஞனும், நல்ல பண்பினனும் ஆகிய இறைவனின் மலரடி பணிந்து போற்றுவோம்.

சொல்லின் செல்வர்
**இரா. செல்வவடிவேல்**

# இராசி பலன்

28-2-2002
(மாசி 16, வியாழன்)
பிரதமை பி. ப 1. 11 வரை
பூரம் மு. ப. 11. 29 வரை
ராகுகாலம்
நல்ல நேரம்

**மேடம்**
காரிய தாமதம், பிரயாண தடங்கல், தொழில் முன்னேற்றம், போசன சுகம்

**இடபம்**
மாணவர் கல்விச் சிறப்பு, ரோக பயம், வாக்குப் பலிதம், திடீர் நன்மை.

**மிதுனம்**
காரிய அனுகூலம், பிரயாண நன்மை, தனவரவு, அன்னியர் சந்திப்பு.

**கடகம்**
அதிகாரிகள் மனஸ்தாபம், வீண் விவாதம், காரிய தாமதம், பொருள் விரயம்.

**சிங்கம்**
நண்பர்கள் உதவி, ஆழ்ந்த சிந்தை, போசன சுகம், முயற்சி கைகூடும்.

**கன்னி**
வீண் அலைச்சல், உணர்ச்சி வசப்படல், தொழில்விருத்தி, காரிய தாமதம்.

**துலாம்**
பொருள் சேர்க்கை, முயற்சி நிறைவேறும், குடும்ப மகிழ்ச்சி, தெய்வ சிந்தை.

**விருச்சிகம்**
தொழில் மேன்மை, முயற்சி கைகூடும், தூரதேசச் செய்தி, பிறர் உதவி.

**தனுசு**
அச்சமான நிலை, உடல் களைப்பு, முயற்சி கைகூடும், உறவினர் உதவி.

**மகரம்**
உடல் சோர்வு, காரிய தடங்கல், களஸ்திர சுகம், எதிர்பாராத பிரச்சினை.

**கும்பம்**
காரிய அனுகூலம், சொத்துக்களால் பயன், திடீர் பயணம், நண்பர்கள் சந்திப்பு.

**மீனம்**
சத்துரு ஜெயம், நோய் குணமடைதல், காரியம் நிறைவேறும், தொழில் நன்மை.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.)

**வளவன்.**

## சமாதானத்தில் 80 வீதமான மக்கள் நம்பிக்கை

(கொழும்பு)

யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவர முடியும். பேச்சுக்கள் மூலம் இலங்கையில் சமாதானம் தோன்றும்.

நடுவம் (சி, ஏ. பி,) நடத்திய அபிப்பிராய வாக்கெடுப்பில் 80 சத வீதமான மக்கள் மேற்படி கருத்தைத் தெரிவித்துள்ளனர். (உ)

# விளையாட்டுச் செய்திகள்

## கிரிக்கெட்போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பாடசாலைகளின் கிரிக்கெட் சங்கம் நடாத்தும் 15, 17 வயதிற்குட்பட்ட பிரிவு கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரில் நாளை மறுதினம்,

**15 வயதின் கீழ் எ பிரிவில்**
யாழ். இந்துக்கல்லூரி அணி எதிர் யூனியன் கல்லூரி அணி யாழ். இந்துக் கல்லூரி மைதானத்திலும்,

**15 வயதின்கீழ் பி பிரிவில்**
திருஇருதயக்கல்லூரி அணி எதிர் புனித பரியோவான் கல்லூரி அணி திருஇருதயக் கல்லூரி மைதானத்திலும்,

**17 வயதின் கீழ் எ பிரிவில்**
விக்டோறியாக் கல்லூரி அணி எதிர் ஸ்கந்தவரோதயா கல்லூரி அணி விக்டோறியாக் கல்லூரி மைதானத்திலும்,

**17 வயதின் கீழ் பி பிரிவில்;**
கொக்குவில் இந்துக் கல்லூரி அணி எதிர் யாழ்ப்பாணக் கல்லூரி அணி கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்திலும் மோதவுள்ளன. (உ-3)

## தாச்சிப் போட்டி

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ நாராயணா சனசமூக நிலையம், மறுமலர்ச்சி விளையாட்டுக் கழகம் ஆகியவற்றின் 50 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு நடத்தும் தாச்சிச் சுற்றுப் போட்டியில் இன்றுபி.ப4.30 மணிக்கு சிந்து வி.கஎதிர் கலைவாணி வி.க ஆகியன மோதவுள்ளன. (உ-3)

## உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் உதைபந்தாட்ட லீக் நடத்தும் அமரர் அ.தம்பிராசா ஞாபகார்த்த சுற்றுக் கேடயத்திற்கான உதைபந்தாட்டப்போட்டியில் நாளை மறுதினம் பி.ப.3.30மணிக்கு அராலி அண்ணா வி.க, எதிர் கல்வயல் விநாயகர்வி.க.பி.ப 3. 45 மணிக்கு சுன்னாகம் ஸ்கந்தா ஐக்கிய வி.க. எதிர் ஜொலிஸ்ரார்வி.க. ஆகியன மல்லாகம்ஸ்ரீபாஸ்கரன் விளையாட்டு மைதானத்தில் மோதவுள்ளன. (உ-3)

## வலைப்பந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கோட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று பி.ப 1.30 மணிக்கு,

15 வயதுப் பிரிவில்: கொக்குவில் இந்துக் கல்லூரி எதிர் செங்குந்தா இந்துக் கல்லூரி, கனகரட்ணம் ம. ம. வி. எதிர் பெரியபுலம் ம. வி,

**17 வயதுப் பிரிவில்**
கனகரட்ணம் ம.ம.வி எதிர் அரியாலை ஸ்ரீ பார்வதி வித், பெரியபுலம் ம.வி. எதிர் கொக்குவில் இந்துக் கல்லூரி, கொக்குவில் இராமகிருஷ்ணா எதிர் செங்குந்தா இந்துக் கல்லூரி, இந்து மகளிர் கல்லூரி எதிர் கோண்டாவில் இராமகிருஷ்ணா,

**19 வயதுப் பிரிவில்**
கனகரட்ணம் ம.ம.வி எதிர் கொக்குவில் இராமகிருஷ்ணா ஆகியன இந்து மகளிர் கல்லூரி மைதானத்தில் மோதவுள்ளன. (உ-3)

★ ★

(கோப்பாய்)

கோப்பாய் கோட்டப் பாடசாலைகளிடையே நடைபெற்றுவரும் வலைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் நாளை காலை 8. 30 மணிக்கு,

15வயதுப் பரிவில்; எ1, டீ2 எதிர் பீ2, சி1, எ2, டீ1, எதிர் பி2, சி2,

17 வயதுப் பிரிவில், எ1 எதிர் டீ2, எ2 எதிர் டீ1, பீ1 எதிர் சீ2, டீ2, எதிர் சீ1 ஆகியன கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி மைதானத்தில் மோதவுள்ளன. (உ-3, 79)

## கசிப்பு வியாபாரம் மும்முரம்

(கொக்குவில்)

கொக்குவில் புகையிரத நிலையச் சுற்றாடல், கலட்டி ஆகிய இடங்களில் கசிப்பு வியாபாரம் பரவலாக இடம் பெற்று வருவதாக தெரிய வருகிறது.

அப்பகுதிகளிலுள்ள பற்றை மறைவுகளிலும், சிறு கொட்டில்களிலும் இந்த வியாபாரம் நடைபெற்று வருவதாகவும் இது குறித்து மேலிடங்கள் பாராமுகமாக இருப்பது பற்றியும் பொதுமக்கள் கவலை தெரிவித்துள்ளனர். (எ-243)

## திருக்குறள் ஆய்வரங்கு

(தும்பளை)

திருவளளுவர் குரு பூசையும், திருக்குறள் ஆய்வரங்கும் இன்று தும்பளை ஸ்ரீவீர மாகாளி அம்பாள்ஆலய மண்டபத்தில் பிற்பகல் 3.00மணிக்கு நடைபெறவுள்ளது.

சிவஸ்ரீ தியாக சோமஸ்கந்தராஜக்குருக்கள்இந்நிகழ்விற்குத் தலைமை தாங்கி 'திருக்குறளில் காணப்படும் சீர்ரிமியம் என்னும் விடயம் குறித்து சிறப்புச் சொற்பொழிவாற்றுவார். (செ-245 )

# தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கான முன்னோடி வினாத்தாள் 02

## பகுதி II இன் தொடர்ச்சி

ஆக்கம் – ''சாயிகல்வி வட்டம்''
கே.வி.குணசேகரம்
எம்.விக்னேஸ்வரன்

**கீழே தரப்பட்டுள்ள விலைப்பட்டியலைப் பயன்படுத்தி 1~2 வரையான வினாக்களுக்கு விடை எழுதுக**

| | | | |
|---|---|---|---|
| அரிசி 1Kg | 42.00 | தீப்பெட்டி 1டசின் | 30.00 |
| தே.எண்ணெய் 1L | 90.00 | சன்லைற் 1கட்டி | 12.50 |
| சீனி 1Kg | 44.00 | பொலிஸ்டர்1M | 68.00 |
| சீத்தை 1M | 58.00 | கன்டோஸ் 1பை | 8.00 |
| 1தேசிக்காய் | 6.00 | | |

01) குளிர்பான வியாபாரி ஒருவன் 50தேசிக்காய்களையும் 5Kg சீனியையும் வாங்கி 104குளிர்பானப் போத்தல்கள் தயாரிக்கிறான். ஒரு போத்தல் 7.00 ரூபா வீதம் விற்றால் அவன் பெறும் இலாபம் எவ்வளவு?

..........................................................................

02) 10 கன்டோஸ் ரொபிகளை வாங்கிய சிந்துஜா 100 ரூபாய் தாளைக் கொடுக்க மிகுதியாக .வியாபாரி 4குற்றிகளைக் கொடுத்தால் ஒரு குற்றியின் பெறுமதி என்ன?


..........................................................................

**03 ~ 07 வரையான வினாக்களுக்கு பின்வரும் அட்டவணையைப் பயன்படுத்தி விடை எழுதுக.**

| பொருள்கள் | தொகை | காலாவதியாகும் திகதி |
|---|---|---|
| பற்பசை | 20பைக்கட் | 2002.07.15 |
| பிஸ்கட் | 40பெட்டிகள் | 2003.06.10 |
| கன்டோஸ் | 50பைக்கட் | 2001.12.12 |
| லக்ஸ்பிறே | 35பைக்கட் | 2002.05.10 |
| அங்கர் | 25பைக்கட் | 2003.07.15 |

காலாவதித் திகதியை ஏறுவரிசையில் எழுதுக
03) ..........................................
04) ..........................................
05) ..........................................
06) ..........................................
07) ..........................................

**08 ~ 12 வரை சலாகை வரைபில் காட்டுக**




இரண்டு பைக்கட்டுக்களில் நாட்டப்பட்ட செடிகளை இரண்டு தகரப் பேணிகளினால் விமலன் மூடினான். அதில் ஒன்றின் மேல் துவாரமிடப்பட்டிருந்தது சில நாட்களின் பின் அவன் சென்று பார்த்த போது துவாரமிடப்பட்ட பேணியால் மூடப்பட்ட செடி துவாரத்தால் வெளியே வந்திருந்தது. மற்றையது வெளிறிச் சோர்ந்திருந்தது.

13) துவாரத்தால் செடி வெளியே ஏன் வந்தது?
..........................................
14) மூடப்பட்டிருந்த செடி ஏன் சோர்ந்திருந்தது?
..........................................
15) இதன் மூலம் நீர் எதை உணர்கிறீர்?
..........................................


பஸ் தரிப்பிடத்திலிருந்து மு.ப.8.30 மணியளவில் பஸ்ஸில் புறப்பட்டு 10Km பயணம் செய்து பட்டணத்தை அடைந்த ஒருவர் அரசினர் ஆஸ்பத்திரிக்குச் செல்கிறார். பஸ்தரிப்பிலிருந்து 100M வடக்கே சென்ற அவர் நாற்சந்தியொன்றில் 150M மேற்கே திரும்பி நடக்கிறார். பின் அவர் 75M தூரம் வடக்கு நோக்கி நகர்ந்து ஆஸ்பத்திரியை அடைகிறார். அங்கே அவருக்கு 289 வது துண்டு கிடைக்கின்றது. அவர் பயணம் செய்த பஸ் வண்டி மணிக்கு 40Km வேகத்தில் பயணம் செய்தது அவர் வீடு வரும் போது நேரம் 2.15 ஆகியது.

16) அவர் பஸ் பயணத்தை ஆரம்பித்த நேரம்?
..........................................
17) அவர் நடந்து சென்ற தூரம்?
..........................................
18) பஸ்தரிப்பு நிலையத்தின் எத்திசையில் ஆஸ்பத்திரி உள்ளது?
..........................................
19) அவருக்கு முன் ஆஸ்பத்திரி சென்றோர் எண்ணிக்கை?
..........................................
20) 1Km பயணத்திற்கு 1ரூபா 95 சதம் தேவையாயின் மொத்தப் பயணத்துக்கான செலவு?
..........................................
21) அவர் 12.45 மணிக்கு பஸ்ஸில் ஏறினார். பஸ் தரிப்பிலிருந்து வீட்டுக்கு வர எடுத்த நேரம்?
..........................................
22) பஸ் தரிப்பிலிருந்து ஆஸ்பத்திரிக்கான தூரம்?
..........................................Km


பட்டணத்துக்குச் சைக்கிளில் சென்ற தீபா, திலக், சிறி, கருணா, ஆகியோரில் தீபா திலக்கிற்கு முன்னே செல்கிறாள். தீபா கருணாவை விட 100M பின்னே செல்கிறாள் சிறி தீபாவை முந்திச் செல்கிறான்.

23) முதலாவதாகச் செல்பவர் யார்?
..........................................
24) மூன்றாவதாச் செல்பவர் யார்?
..........................................

**பாரம் பரிய கசை வடிவங்கள் சில கீழே தரப்பட்டுள்ளன. அவற்றன் சரியான விடையைச் சுற்றி வட்டமிடுக.**

25) 
1. அரசிலை
2. நீர்ச்சுழி
3. சீப்புரு

26) 
1. இரேகை
2. நீர்ச்சுழி
3. கோலம்


27) 
1. தனியிழை
2. அடுக்குரு
3. பாயிழை

**கட்டங்களிலுள்ள சொற்களிலிருந்து இடைவெளிகளை நிரப்புக.**

| மணல் மண், வண்டல் மண், களி மண் |
|---|

28) நீரை அதிகளவு வைத்திருக்கும் மண்?
..........................................
29) விரைவாக காற்று உட்புகக் கூடிய மண்?
..........................................
30) பயிர்ச் செய்கைக்குகந்த மண்?
..........................................

**A,B,C,D,E என்னும் எரியும் மெழுகுவர்த்திகள் 5 கீழே காட்டப்பட்டுள்ளன. இவை வெவ்வேறு அளவுடைய கண்ணாடிக் குவளைகளால் மூடப்பட்டுள்ளன.**



31) தீ அணைந்த சிறிய மெழுகுவர்த்தி எது?
..........................................
32) பெரிய மெழுகுவர்த்தி எது?
..........................................
33) மூன்றாவதாக அணையுமென நீர் எதிர்பார்க்கும் மெழுகுவர்த்தி எது?
..........................................
34) கடைசியாக அணையுமென நீர் எதிர்பார்க்கும் மெழுகுவர்த்தி எது?
..........................................
35) கடைசியாக அணையும் மெழுகுவர்த்தியின் ஒரு பக்கத்துக்கு கட்டையொன்றை வைத்து உயர்த்தினால் என்ன நடக்கும்?
..........................................

**பாடசாலையை விட்டு வரும் போது விபத்துக்குள்ளான என்னை..... என்னும் தலைப்பில் சரியான எழுவாய் பயனிலையுடன் 5 வாக்கியங்கள் எழுதுக?**

36) ..........................................
37) ..........................................
38) ..........................................
39) ..........................................
40) ..........................................

## இன்று ஒரு தகவல்

# நம்பிக்கை வேண்டும் கடவுள் வரமாட்டார்

சரணாகதி என்பது உதட்டளவில் இருக்கக் கூடாது. கடவுளிடம் முழுமையான அளவில் ஒருவன் உண்மையிலேயே சரணாகதியடைய வேண்டும். அப்போதுதான் கடவுளுடைய உதவி அவனுக்குக் கிட்டும். அப்படி இல்லாவிட்டால் பகவானின் கிருபையைப் பெறமுடியாது. இந்தக் கருத்தைப் பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர் பின்வரும் கதை மூலம் விளக்குகிறார்.

ஒருமுறை சலவைத் தொழிலாளி ஒருவன் ஒரு பக்தனைக் கடுமையாக அடித்தான். அப்போது பக்தன், 'நாராயணா, நாராயணா!' என்று மட்டும் சொல்லி அலறினான். அப்போது ஸ்ரீமத் நாராயணன் வைகுண்டத்தில் லட்சுமி சமேதராய் வீற்றிருந்தார். அவருடைய காதில் பக்தனின் அறைகூவல் விழுந்தது. உடனே அவர் எழுந்து புறப்பட ஆயத்தமானார். தேவி அவரிடம் 'நாதா தாங்கள் எங்கே போகிறீர்கள்?' என்று கேட்டாள்.

'தேவி என் பக்தன் ஒருவன் பெரிய ஆபத்தில் இருக்கின்றான். நான் அவனைக் காப்பாற்றியாக வேண்டும்' என்று சொல்லிவிட்டு அவசர அவசரமாக ஸ்ரீமத் நாராயணன் புறப்பட்டார். ஆனால், இரண்டு மூன்று அடி தூரம் சென்றதும் மீண்டும் திரும்பி வந்து அவர் தமது ஆசனத்தில் அமர்ந்து விட்டார். இதைப் பார்த்த லட்சுமி திகைத்தாள். 'பிரபே, இவ்வளவு விரைவில் திரும்பி விட்டீர்களே, ஏன்?' என்று கேட்டாள்.

நாராயணர் புன்முறுவல் பூத்தபடியே பதில் சொன்னார். நான் போகவேண்டிய அவசியமே இல்லாமற் போனதைப் பார்த்தேன். அந்தப் பக்தனும் சலவைத் தொழிலாளி போல் ஆகிவிட்டான். தன்னைத் தானே அவன் காப்பாற்றிக் கொள்ள நினைத்தான். இப்போது தன்னை அடித்தவனை அவன் திருப்பி அடிக்கத் தொடங்கியிருக்கிறான். ஆகவே, நான் அங்கே போய்ச் செய்ய வேண்டியது ஒன்றும் இல்லை. எனவே, அவசியம் இல்லாததால் நான் திரும்பி வந்துவிட்டேன்' என்று பதில் சொன்னார்.

முற்றிலும் உன்னை நீ கடவுளிடம் ஒப்படைத்துச் சரணாகதி செய்யவேண்டும். அப்படி நீ செய்தாலன்றிக் கடவுள் உன்னைக் காப்பாற்ற மாட்டார். உண்மையாகவே உன்னை நீ பகவானுடைய பீடத்தில் சமர்ப்பித்து விட வேண்டும். நாம் நமது ஆணவத்தைத் துறந்தாக வேண்டும். அப்படிச் செய்தாலன்றிப் பகவான் நமது பொறுப்புகளைத் தாமாக ஏற்றுக் கொள்வதில்லை. எவன் ஒருவன் கடவுளிடம் முற்றிலும் தன்னை அர்ப்பணித்துச் சரணமாக பற்றுகிறானோ, அவனை மட்டுமே பகவான் காப்பாற்ற முன் வருகின்றார். ●

நன்றி

ஸ்ரீ ராமகிருஷ்ணர் சொன்ன கதைகள்.

# சமாதானமுயற்சிகளைக் குழப்பும் தீய சக்திகளுக்கு அரசு அடிபணியாது

### யாழ். வந்த இளைஞர் விவகார அமைச்சர்

(யாழ்ப்பாணம்)

தீயசக்திகள் சில, அரசின் சமாதான முயற்சிகளைக் குழப்ப முயல்கின்றன. எமது அரசு இதனை ஒருபோதும் அனுமதிக்க மாட்டாது.

யாழ். வந்த இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சர் ஜோன்சன் பெர்னாண்டோ யாழ். செயலகத்தில் திங்கள் நடைபெற்ற கலந்துரையாடலில் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில், துணிச்சல்மிக்க நல்ல தலைவர்கள் ஐக்கிய தேசிய முன்னணியில் உள்ளனர். நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த இவர்கள் திடசங்கற்பம் பூண்டுள்ளனர்.

வடபகுதிமக்கள் மட்டுமன்றி தென்பகுதி மக்களும் சமாதானத்தையே விரும்புகின்றனர்.

கடந்த 1971, 1972 ஆம் ஆண்டுக் காலப்பகுதிகளில் நாசகார சக்திகள் சிலநாட்டில் பெரும் துன்பச் செயல்களை விளைவித்தன.

இவற்றைஎல்லாம் படிப்பினையாகக் கொண்டு இனி வரும் காலத்தில் நாசகார நடவடிக்கைச் சக்திகளைத் தலைதூக்கவிடாது தடுப்பதே எமது நோக்கம்.

எமது தலைவர் ரணில் விக்கிரமசிங்க, துணிச்சலுடன் சமாதான முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றார்.

எமது அமைச்சரவையின் முழுப் பங்களிப்பும் இதற்கு உண்டு.

யாழ்ப்பாணத்தில்வாழும் மக்களின் நிலையை நேரில் கண்டறியவே நாம் இங்கே வந்துள்ளோம் என்று குறிப்பிட்டார்.

அத்துடன், 17 இலட்சம் ரூபா பெறுமதியான விளையாட்டு உபகரணங்களையும் அமைச்சர் விளையாட்டுக் கழகங்களிடம் கையளித்தார்.

உயர்கல்வி, கல்விப்பயிற்சிகள் அமைச்சர் கபீர்காசிம் அங்கு உரையாற்றுகையில்,

கடந்த 20 வருடங்களுக்குப் பின்பு, நாட்டில் ஒரு அமைதியான சூழ்நிலையில் நாங்கள் யாழ். வருவது மிகவும் ஒரு மகிழ்ச்சியான விடயம்.

முன்னைய காலங்களில் மூவின மக்களும் எவ்வாறு ஒரே இடத்தில் சந்தோசமாக இருந்தோமோ அதுபோன்றதொருநிலை விரைவில் உருவாகும்.

நாங்கள்வரும் வழியில் யுத்தத்தின் அழிவுகளைத்தரிசிக்க முடிந்தது. இவற்றைப் பார்த்து மனம் மிக வேதனைப்பட்டோம்.

இவ்வாறானதொரு நிலையை இனியும் ஏற்படாது பார்த்துக் கொள்வது எம் எல்லோருடைய பொறுப்புமாகும் என்று குறிப்பிட்டார்.

சுற்றுச் சூழல் இயற்கை வளங்கள் பிரதி அமைச்சர் இந்திக பண்டாரநாயக்க உரையாற்றுகையில்,

யாழ்ப்பாணம் வருவேன் என்று நான் கனவிலும் எண்ணவில்லை. எங்கள் அரசு பதவியேற்ற குறுகிய காலத்தில் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் யாழ்ப்பாணம் வந்துசெல்லும் சுமுக சூழ்நிலை ஏற்பட்டுள்ளது வியப்பிற்குரியது.

தமிழர்-சிங்களவர், முஸ்லிம்கள் என்ற வேறுபாட்டுடன் நாம் பிரிந்து வாழக் காரணம் பழைய அரசியல்வாதிகளே. இனியெப்போதும் இவ்வாறானநிலை ஏற்படாது.

20 வருடங்களாக இடம்பெற்ற உக்கிரப் போரை 2மாதங்களில் முடிவுக்குக் கொண்டு வருவதுநினைத்துப் பார்க்கவே முடியாத காரியம் என்று குறிப்பிட்டார்.

இந்து கலாசார அமைச்சர் தி. மகேஸ்வரனும் அங்கு உரையாற்றினார்.

இக் கலந்துரையாடலில் யாழ். மாவட்ட நடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராஜா மற்றும்யாழ். பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை மற்றும் அமைச்சர்களுடன் கூடவே வந்த தென்பகுதிப் பாராளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். (உ10)

# சமாதான முயற்சியில் இந்தியாவின் ஆலோசனை

(கண்டி)

இந்தியாவின் நல்லெண்ணத்துடன் தான் சமாதான முயற்சிகள் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றன என்று அரசியலமைப்பு விவகார அமைச்சர் ஜீ. எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அண்மையில் அவர் கண்டி மல்வத்த பௌத்த பீடத்திற்குச் சென்று மகாநாயக்க தேரரின் ஆசீர்வாதம்பெற்று புரிந்துணர்வு உடன்படிக்கை, யுத்த நிறுத்தம்குறித்து விளக்கம் அளித்தார்.

அப்போது அமைச்சருடன் உரையாடிய தேரர், நோர்வே சொல்வதையெல்லாம் அப்படியே ஏற்றுக் கொள்ளாது இந்தியாவின் ஆலோசனைகளையும் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று குறிப்பிட்டபோதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (எ)

# மண் ஏற்றிவந்த எண்மரிடம் தலா 500 ரூபா குற்றப்பணம் அறவீடு

(மந்திகை)

மணல் ஏற்றத் தடைவிதிக்கப்பட்ட பகுதிகளில், மாலை வேளையில் இரண்டு உழவு இயந்திங்களில் மணல் ஏற்றி வந்த 8 பேரிடம் பருத்தித்துறை நீதிமன்றம் குற்றப்பணம் அறவிட்டுள்ளது.

வல்லிபுரக் குறிச்சிப் பகுதியில் வைத்து பருத்தித்துறைப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட மேற்படி நபர்கள் மீதான வழக்கு விசாரணை கடந்த திங்களன்று பருத்தித்துறை நீதிமன்றத்தில் இடம்பெற்றபோது.

தலா 500 ரூபாவை குற்றப்பணமாகச் செலுத்துமாறும் ஏற்றிவந்த மண்ணை நீதிமன்றில் ஒப்படைக்குமாறும் நீதிபதி அ. பிரேம்சங்கர் உத்தரவிட்டார். (உ-23)

# யாழ். போதனா வைத்தியசாலையில் நாளை புற்றுநோய்ச் 'சிகிச்சை

(யாழ்ப்பாணம்)

கொழும்புமகரகமவைத்தியசாலையில் இருந்து புற்றுநோய்க்கு சிகிச்சையளிப்பதற்காக வைத்திய நிபுணர் மற்றும் வைத்திய உத்தியோகத்தர்கள் கொண்டகுழுவொன்று நாளை யாழ்.போதனாவைத்தியசாலைக்கு வருகை தரவுள்ளது.

இத் தினத்தில் புற்றுநோயாளர்கள் அனைவரையும் சமுகமளிக்குமாறும், உணவு உண்ணச் சிரமப்படுபவர்களை ணவருந்தாது வருமாறும் ணிப்பாளர் செல்வி நவமலர் கரத்தினம் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக பலாலி இராணுவ முகாம் பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையக ஊடகத்துறைவெளியிட்டுள்ள அறிக்கையில்,

யாழ்.பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகத்தின் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் ரி.எஸ்.கே. 'விஜேசூரியாவின் வழிகாட்டலுக்கமைய இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சனத் கருணாரத்னாவின்ஏற்பாட்டில்புற்றுநோய்க்குச் சிகிச்சையளிக்கும் மருத்துவ சேவையை நாளையும்

(-ம் பக்கம் பார்க்க)

## வணிகர்கழக புதியநிருவாக சபை

(யாழ்ப்பாணம்)

கடந்த 23 ஆம்திகதி நடைபெற்ற யாழ். வணிகர்கழகத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் தலைவராக இ. ஜெயசேகரன், உபதலைவராக த. சற்குணராசா, செயலாளராக கா. நித்தியானந்தன், உப செயலாளராக இ. ஜனக்குமார் பொருளாளராக கு. கங்கைவேணியன் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

பதின்நான்குபேர் கொண்ட நிருவாகசபையும் தெரிவுசெய்யப்பட்டது.

## நாகமரங்கள் நாட்டல்

(கலவெவ)

இலங்கையின் தேசிய மரமாக நாகமரம பிரகடனப்படுத்தப்பட்டு 16 வருடங்கள் நிறைவு பெற்றமையை முன்னிட்டு 25-ம் திகதி மிகுந்தலைப்பகுதியில் விசேவைபவங்களும் நாகமரக் கன்றுகளை நாட்டும் நிகழ்வுகளும் இடம்பெற்றுள்ளன.

1986 ஆம்ஆண்டில்மறைந்த ஜனாதிபதி ஆர். பிரேமதாஸாவின் ஆட்சிக் காலத்தில் நாகமரம் தேசியமரமாகப் பிரகடனப் படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (எ)

## ச. ச. நிலைய சமாசம் அங்குரார்ப்பணம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைப் பிரதேச சனசமூக நிலையங்களின் சமாச அங்குரார்ப்பணக் கூட்டம் அண்மையில் இடம்பெற்றுள்ளது.

ஊர்காவற்றுறைப் பிரதேச சபையின் செயலாளர் கு. கணேசலிங்கம் தலைமையில் இடம்பெற்ற இவ் வங்குரார்ப்பணக் கூட்டத்தில் யாழ். மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி. கிருஸ்ணசாமி கலந்து கொண்டார்.

மேற்படி சமாசத்தின் தலைவராக ஆ. சிற்றம்பலம், செயலாளராக தி. ஞா. செந்தமிழ்ச்செல்வன், பொருளாளராக அ. புஸ்பராணி, உப தலைவராக கு. சுந்தரலிங்கம், உப செயலாளராக ம. யோகராசா ஆகியோரும்' நிர்வாக உறுப்பினர்களாக 10 பேரும் தெரிவு செய்யப்பட்டனர். (உ- 75)

# அமெரிக்க உயர்ஸ்தானிகர் பல்கலைக்கழகசமூகத்துடன் கலந்துரையாடல்

(கல்வியங்காடு)

அமெரிக்க உயர்ஸ்தானிகர் அஸ்லிவில்ஸ் உட்பட 8பிரதிநிதிகள் கடந்த திங்களன்று யாழ். பல்கலைக் கழகத்திற்கு விஜயம் செய்து துணைவேந்தர் பொ. பாலசுந்தரம் பிள்ளையைச் சந்தித்து கலந்துரையாடினா.

தற்போதைய சமாதான முயற்சிகளின் முன்னேற்றம், இன்றைய சூழ் நிலையில் யாழ். பல்கலைக் கழகம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் என்பவை தொடர்பாக அங்கு பரிசீலனை செய்யப்பட்டது.

பின்னர் மாணவர் பிரதிநிதிகளைச் சந்தித்து தற்போதைய அரசியல் நிலை தொடர்பான கருத்துகளைக் கேட்டறிந்தனர்.

இச் சந்தர்ப்பத்தில் பல்கலை மாணவர் சார்பில், விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கப்பட வேண்டும். என்று வலியுறுத்திக் கூறப்பட்டதாகவும் தெரியவருகிறது. (உ-245)

# மக்கள் வங்கியின் முக்கிய பிரமுகர்கள்வருகை

(யாழ்ப்பாணம்)

மக்கள் வங்கியின் நிறைவேற்று உத்தியோகத்தரும் பொதுமுகாமையாளருமாகிய டிறெக்கெலி, பிரதிப்பொது முகாமையாளர் கே. வி. குமாரபத்திரன, மக்கள் வங்கி வடவலய உதவி பொது முகாமையாளர் சி. இளம்பிறைநாதன் ஆகியோர் இன்று கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம்வரவுள்ளனர்.

யாழ்ப்பாணத்திலுள்ள மேற்படி வங்கியின் கிளைகளை நவீனமயப்படுத்தல், சிறந்த சேவைகளை வழங்குவதற்கேற்ற நடவடிக்கைகளை எடுத்தல் ஆகியவிடயங்கள் தொடர்பாக கிளைத் தலைவர்கள், வங்கி ஊழியர்கள் கிளை முகாமையாளர்கள் வங்கி வாடிக்கையாளர்கள் ஆகியோரைச் சந்தித்து உரையாடவுள்ளனர். (உ-3)

## சிந்தனைக்கு விருந்து

### இன்று அவர்களுக்கு ஏமாற்றம்

அண்மிக் கப்பல்கள் வருமுன்னர்
ஆகா! இவர்க்குக் கொண்டாட்டம்
மண்ணெய் பதுக்கி வைத்தவரும்
மாவும் சீனியும் ஒளித்தவரும்
கண்ணைக் கட்டி அடித்திடவும்
காசு மிகவும் சேர்த்திடவும்
எண்ணிக் கொண்டே இருந்தார்கள்
இன்றவர் களுக்கோ ஏமாற்றம்.

'பழையவன்'

## திருவள்ளுவர் விழா

(சொக்குவில்)

காரைநகர் கலாநிதி ஆ. தியாகராசா மத்தியமகா வித்தியாலய இந்து மாணவர் மன்றம் இன்று திருவள்ளுவர் விழாவினைக் கொண்டாட உள்ளது.

காலை 8.30 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் மன்றத் தலைவர் ச. சதீஸ்குமாரின் தலைமையில் ஆரம்பமாகவுள்ள இவ்விழாவில் செஞ்சொற் கொண்டல் ஆறு திருமுருகன் சிறப்புச்சொற்பொழிவாற்றவுள்ளார். (எ-243)

# புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் உள்ள சில விடயங்கள் சிக்கலானவை

## டக்ளஸ் எம்.பி. பிரதமருக்கு கடிதம்

(லண்டன்)

நிரந்தரயுத்தநிறுத்த ஒப்பந்தத்தில் சில விடயங்கள் சிக்கலுக்குள்ளாகியிருப்பதாக ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகமும் பாராளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இந்த குறித்து கடிதமொன்றை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு அனுப்பி [illegible] லண்டன் பி.பி.சி வானொலிக்கு நேற்று தெரிவித்தார்.

இந்த ஒப்பந்தத்தில் புலிகள் 90 நாட்களுக்குள் இராணுவக்கட்டுப்பாட்டு பிரதேசங்கள் உட்பட வடகிழக்கு பகுதிகள் எங்கும் சுதந்திரமாக நடமாடலாம் என தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இது ஏற்கனவே ஜனநாயக நீரோட்டத்தில் கலந்து கொண்ட எமது அமைப்பு உட்பட சக தமிழ் அமைப்புகளுக்கு ஆபத்தாக அமையலாம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் சர்வதேச கண்காணிப்பு குழு நிறுத்தப்படாமைகுறித்தும் ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-4)

## தீயில் எரிந்து பருகாயம்

(மந்திகை)

சோடா போத்தலினுள் இருந்த பெற்றோலை மண்ணெண்ணெய் என எண்ணி, அதனை அடுப்பிற்குள் ஊற்ற முற்பட்ட வேளை தவறி கீழே இருந்த விளக்கிற்குகில் விழுந்து தீப்பற்றியதில், அதற்குள் அகப்பட்ட இளம் குடும்பப் பெண் பலத்த எரிகாயங்களுக்கு ஆளானார்.

மீசாலைப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் மட்டுவிலையைச் சேர்ந்த ஜெ. விக்கினேஸ்வரி என்றபெண்ணே எரிகாயங்களுக்குஆளாகிபருத்தித்துறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ-23)

## சிறார்க்கு பாடசாலை உபகரணம்

(மந்திகை)

சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் அனுசரணையுடன் ஊற்று நிறுவனம், இடம்பெயர்ந்து முகாம்களில் தங்கியுள்ள பாடசாலை மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்களை வழங்கின்றது. (உ-23(

## வருடாந்த உற்சவம்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி பழங்கிணற்றடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் கோவில் வருடாந்த மகோற்சவம்நேற்றுமுன்தினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

12 ஆம் திகதி தேர்த் திருவிழாவும் 13 ஆம் திகதி தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளது. (ந-5)

## கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கல்வி வலய நலன் புரிச்சங்கத்தின் வருடாந்தக் கூட்டம் வெள்ளிக்கிழமை கல்வி வலயத்தின் கேட்போர் கூடத்தில் வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி செ.மகாலிங்கத்தின் தலைமையில் நடைபெறவுள்ளது. (எ-9)

## டெங்கு ஒழிப்பு சிரமதானம்

(மந்திகை)

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை ஊழியர்கள் துன்னாலைப் பகுதியில் நேற்று முன்தினம் டெங்கு ஒழிப்பு தொடர்பான சிரமதானப் பணிகளில் ஈடுபட்டனர்.

சுகாதார வைத்திய அதிகாரி என். எஸ். ஞானசேகன் தலைமையில் சென்ற சுகாதாரப் பரிசோதகர்கள், குடும்பநல உத்தியோகத்தர்கள் மற்றும் சுகாதாரத் தொண்டர்கள் இப்பணியில் ஈடுபட்டனர். (உ-23)

## நடமாடும் சட்டசேவை சனியன்று ஆரம்பம்

(கொழும்புத்துறை)

கரித்தாஸ் இலங்கை-கொழும்பு செடெக் நிறுவன அனுசரணையுடன் மனித முன்னேற்ற நிலையம் (கியூடெக்) நடத்தும் நடமாடும் சட்டசேவை எதிர்வரும் சனிக்கிழமை 2 ஆம் திகதி முதல்5 ஆம்திகதிவரை யாழ். மாவட்டத்தில் இடம்பெறவுள்ளது.

மேற்படி சட்டசேவை இடம்பெறும் இடங்கள் வருமாறு,

2 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணி யாழ். குருநகர் சனசமூக நிலையம், பி.ப. 2.30 மணி யாழ். பேராலய மண்டபம்,

3 ஆம் திகதி - காலை 9.30 மணி நாரந்தனை, பி.ப. 2.30 மணி கரவெட்டி பங்குமனை,

4 ஆம் திகதி-மு.ப. 10.00 மணி ஊர்காவற்றுறை,

5 ஆம் திகதி- காலை 9.00 இளவாலைபங்குமனை,பி.ப. 3.00 மணி மானிப்பாய்.

காணாமல் போனவர்கள், அவசரகால, பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழான கைதுகள், ஜீவனாம்சம், ஓய்வூதியம், தொழில் பாதிப்பு சட்ட உதவிகள், வேறு சட்ட ஆலோசனைகள் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-223)

## யுத்தநிறுத்த ஒப்பந்தம் நாடெங்கும் மகிழ்ச்சி

### பௌத்தநிலையம் அறிக்கை

(மாத்தறை)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா புலிகளுடன் யுத்தநிறுத்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளமை நாடு முழுவதும்புதுமலர்ச்சியைத்தோற்றுவித்துள்ளது என்று மாத்தறை பௌத்த நிலையம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

கடந்த காலங்களில் மாத்தறைப் பகுதியில்வீட்டிற்கு வீடு மரண ஓலங்களைக் கேட்கக் கூடியதாக இருந்தது. சமாதான உடன்படிக்கை கைச்சாத்தானபின்இப்போதுதென் பகுதிமக்களிடையே புது மலர்ச்சியும் மகிழ்ச்சியும் காணப்படுகின்றன.

இதேபோல வடபகுதி மக்களும் வாழும்நிலை தோன்றியுள்ளது. தமிழ்மக்களுக்கு தேவையானவசதிகளைவழங்க வேண்டியது அரசின் கடமையாகும்.

சிங்களவர்கள் தமிழர்களின் எதிரிகளல்ல நண்பர்கள் என்பதைக் காட்டுவதற்கு இன்றைய சூழ்நிலையில் சிங்கள மக்கள நியாயங்களைச் செய்ய வேண்டும் என்று மேலும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## சாவக. பொதுச் சந்தை நேற்று திறந்து வைப்பு

(தென்மராட்சி)

சாவகச்சேரிபொதுச்சந்தை நேற்று வைபவரீதியாக மீளவும் திறந்து வைக்கப்பட்டது.

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் கழகத் தலைவர் என்.சற்குணநாதன், செயலாளர் எஸ்.எஸ். அருளானந்தம் ஆகியோர் இதனைத் திறந்து வைத்தனர்.

இதேவேளை, சாவகச்சேரி பிரதேச செயலகம் நாளை முதல் சாவகச்சேரி பழைய பொலிஸ் நிலையத்திற்கு அருகிலுள்ள தனியார் வீடொன்றில் இயங்கவுள்ளது. (உ-77)

ஐ. நா. அகதிகளுக்கான உயர் ஸ்தானிகராலயம்

## இடம்பெயர்ந்தோர் பற்றி மதிப்பீடு செய்ய உதவும்

### அமைச்சர் ஜயலத் தெரிவிப்பு

(கொழும்பு)

யுத்த அனர்த்தங்களின்போது இடம்பெயர்ந்தவர்கள் பற்றி மதிப்பீடு செய்வதற்காக ஐக்கியநாடுகள் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகராலயம் உதவி வழங்குவதற்கு முன்வந்திருக்கின்றது.

இது தொடர்பான ஒப்பந்தம் ஒன்று திங்கள் கைச்சாத்தானது. இதில் அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனாவும் ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகராலய பிரதிநிதிஇருவரும் கையெழுத்திட்டனர்.

இந்த உடன்படிக்கைக்கு அமைய இடம்பெயர்ந்தவர்கள் சம்பந்தமான மதிப்பீட்டுக்களை மேற்கொள்வதற்கான தொழில் நுட்பமும் நிபுணத்துவமும் கிடைக்கும் என அண்மையில் நடைபெற்றன செய்தியாளர்மகாநாடொன்றில் அமைச்சர் ஜயலத் தெரிவித்துள்ளார். (செ)

கணனிப்பகுதி

## ஆரம்பமும் பரிசளிப்பும்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் சயன்ஸ் அக்கடமியின் கணனிப்பகுதி ஆரம்பமும்,பரிசளிப்பும் கணிப்பீட்டு அறிக்கை வழங்கலும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2.45 மணிக்கு நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக ஐ.ஐ.எஸ் நிறுவனப் பணிப்பாளர் கே. விக்னேஸ் கலந்து கொள்ளவுள்ளார். (உ)

உடுவில் உரும்பிராய் பகுதிகளில்

## இரு நிலக்கீழ் எண்ணெய் தாங்கிகள் அமைக்க முடிவு

(யாழ்ப்பாணம்)

சகல எரிபொருள்நிலையங்களும்தினமும்காலை 7.00மணி தொடக்கம் மாலை6.30 மணி வரை இயங்கவேண்டும். இதை பெற்றோலியக் கூட்டுத்தாபன அதிகாரிகள் பார்வையிடுவார்கள். இயங்காதநிலையங்களின் அனுமதி ரத்துச் செய்யப்படும்.

இவ்வாறு யாழ். அரசாங்க அதிபர் கே. சண்முகநாதன் தெரிவித்துள்ளார். யாழ்ப்பாணத்தில் எரிபொருள் விநியோகம், பாவனை தொடர்பாக அண்மையில் யாழ். செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் உரையாற்றும்போதே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

எரிபொருளுக்கான தேவை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. எனவே அதற்கு ஏற்றவகையில் கூட்டுத்தாபனம் எரிபொருளை விநியோகிக்க வேண்டுமென்று மேலும் தெரிவித்தார்.

எரிபொருள் நிரப்பு நிலைய முகவர்கள் எந்தவிதமான காரணத்தையும் கூறாது எரிபொருளைச் சீராக விநியோகிக்க வேண்டும். தமக்குத் தேவையான எரிபொருளை அவர்கள் முன்னேற்பாட்டுடன் பெற்று வைத்திருக்க வேண்டும் என்று பெற்றோலியக் கூட்டுத்தாபன வடக்கு கிழக்கு அதிகாரி எஸ். சிவஞானம் பேசுகையில் கூறினார்.

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் யாழ். பிராந்திய முகாமையாளர் ஏ. அந்தோனிப்பிள்ளை பேசுகையில் எரிபொருள் விநியோகம் விரைவில் சீராக நடைபெறும் என்று தெரிவித்தார்.

விவசாயிகளுக்குத் தேவையான மண்ணெண்ணெயை ஒழுங்காக வழங்குவதற்கு உடுவில், உரும்பிராய் ஆகிய இடங்களிலுள்ள கமநலச் சேவைத் திணைக்களத்தில் இரு நிலக்கீழ் தாங்கிகள் அமைப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது. (எ-9)

# ஊனமுற்ற படையினர் சங்கம் அரசின் முயற்சிக்கு பாராட்டு

(கொழும்பு)

சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் எடுத்துவரும் நடவடிக்கைகளை ஊனமுற்ற படையினர் சங்கம் பாராட்டியுள்ளது.

இது குறித்து மேற்படி சங்கத்தின் தலைவர் விடுத்துள்ள அறிக்கையில்,

கடந்த 20 ஆண்டுகள் நடைபெற்ற கொடூர யுத்தத்தினால் படையினர் உட்பட பொதுமக்கள் நம்பமுடியாததும், நடக்கமுடியாததும், மறக்கமுடியாததுமான காரணங்களுக்காக அழிந்துள்ளனர்.

ஏழைமக்களின் குடும்பங்களைச் சேர்ந்தவர்களே பெரும்பாலும் இவ்வாறு அழிந்துள்ளனர்.

ஊனமுற்றவர்களும், விதவைகளும், 7 இலட்சம் வரையான அகதிகளும் உள்ளனர். பொருளாதாரமும் அழிந்து போயுள்ளது.

சமாதான விடயத்தில் வேறு எந்தவொரு அரசாங்கமும் சென்றிராத தூரத்திற்கு இன்றைய அரசாங்கம் சென்றுள்ளது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயமாக அரசாங்கம் எடுக்கும் நடைமுறைகளுக்கு எமது பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சமாதானப் பாதையைத் தேர்ந்தெடுப்பதில் உள்ள தடைகள் பலவற்றையும் நீக்க முன்வந்துள்ள விடுதலைப் புலிகளும் பாராட்டுக்குரியவர்கள்.

ஆனால் சில அரசியற் கட்சிகள் அரசாங்கம் முன்னெடுக்கும் நல்ல முயற்சிகளை தமது அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்காக எதிர்க்க முனைகின்றன.

இந்நிலையில் 8 ஆயிரம் உறுப்பினர்களைக் கொண்ட எமது சங்கத்தின் ஒத்துழைப்பை அரசாங்கத்தின் சமாதான முயற்சிகளுக்குத் தருவதற்குத் தயாராயிருக்கின்றோம் என்று குறிப்பிடப் (உ)

## போர் நிறுத்த ஒப்பந்தம் வீரமணி வரவேற்பு

(சென்னை)

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் சென்னையில் தங்கியிருந்து இலங்கையின் இனவிவகாரம் தொடர்பான பேச்சுவார்த்தையில் ஈடுபட, இந்திய மத்திய அரசும், தமிழக மாநில அரசும் அனுமதிக்க வேண்டும்.

இவ்வாறு திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் கி.வீரமணி இந்திய மத்திய மாநில அரசுகளைக் கோரியுள்ளார்.

இலங்கை அரசினதும், விடுதலைப் புலிகளினதும் நிரந்தர போர் நிறுத்த ஒப்பந்தத்தை வரவேற்றும், அவர் கடந்த சனிக்கிழமை அறிக்கையொன்றை வெளியிட்டார்.

அவ்வறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

மனித நேயக் கண்ணோட்டத்துடன் இலங்கைத் தமிழர்களின் வாழ்வுரிமைப் பிரச்சினையை அணுக வேண்டும். போர் நிறுத்தம் ஏற்பட உதவிய நோர்வேக் குழுவினர்,

இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா, விடுதலைப் புலிகளின்தலைவர்வே. பிரபாகரன் ஆகியோரை உலகம் முழுவதிலுமுள்ள தமிழர்களும், மனித உரிமைப் பற்றாளர்களும் வாழ்த்துவார்கள் என்றும் வீரமணி மேலும் தெரிவித்துள்ளார். (இ)

**தரம் 05 புலமைப் பரிசில் முன்னோடி வினாத்தாள் 01இல் அதிகூடிய புள்ளிகளைப் பெற்றவர்களின் பெயர் விபரம்**

01) கு.மயூரி, யாழ்புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்
02) நா.மயூரி, சாவகச்சேரி றோ.க.த.க. பாடசாலை
03) செ.நிரோஜன், கோண்டாவில் சி.சி.த.க பாடசாலை
04) வீ.ஜனகன், யாழ்.பரியோவான் கல்லூரி
05) ப.வானதி, நவாலி சென்பீற்றர்ஸ் றோ.க.த.க பாடசாலை
06) ர.பிரியதர்சினி, சங்கானை சிவப்பிரகாச வித்தியாலயம்
07) கு.யனுதாஸ், யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை
08) ம.றொசான், கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை
09) அ.றெஜிஜோண்சன், யாழ்.மத்திய கல்லூரி
10) வே.அஜலக்ஷன், கோண்டாவில் இந்து மகாவித்தியாலயம்
11) ப.மதுசாந், கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாலயம்
12) சி.கஸ்தூரி, தம்பசிட்டி மெ.மி.த.க பாடசாலை
13) சௌ.சுலக்ஸ்சனா, துன்னாலை காசிநாதர் வித்தியாலயம்
14) ஸ்ரீ.சிவாத்மிகா, கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம்
15) ப.சோபியா, நெல்லியடி மெ.மி.த.க பாடசாலை
16) தெ.வாணி, யாழ்.இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை
17) ச.மதுரா, மயிலணி சைவ மகாவித்தியாலயம்
18) தி.திசோநீற்றா, சாவகச்சேரி றோ.க.த.க.பாடசாலை
19) ஞா.அன்ரனி தர்ஷிக், மானிப்பாய் சென்ற் ஆன்ஸ் பாடசாலை
20) க.திவ்விஜா, கோப்பாய் நாவலர் பாடசாலை
21) எ.துவாரகா, தேவரையாளி இந்துக்கல்லூரி
22) சோ.சாந்தி, உடுவில் மகளிர் கல்லூரி
23) ச.விதுரன், யாழ்புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்
24) க.மதுராகரன், மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை
25) ம.சிந்துஜன், பண்ணாகம் மகாவித்தியாலயம்
26) பி.டியோனிஸ்கூரே, மானிப்பாய் சென்ற் ஆன்ஸ் பாடசாலை
27) செ.சரிதா, அராலி சரஸ்வதி மகாவித்தியாலயம்
28) த.அஜித்தா, கோப்பாய் நாவலர் பாடசாலை
29) தே.பத்திரிட்சியா, சுண்டுக்குளி மகளிர்கல்லூரி
30) சோ.ஐங்கரன், அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை
31) யோ.சாரங்கன், வட்டு.யாழ்ப்பாணக் கல்லூரி
32) வி.கவாஸ்கர், மானிப்பாய், சென்ற் ஆன்ஸ் பாடசாலை
33) யோ.அசாத், அளவெட்டி செ.றோ.க.த.க வித்தியாலயம்
34) ச.மஞ்சூரி, மயிலணி சைவ மகாவித்தியாலயம்
35) மா.செந்தூரி, உடுவில் மகளிர் கல்லூரி
36) அ.வனஜா, யாழ்.இந்து ஆரம்பபாடசாலை
37) ம.பிரதீபன், மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம்
38) அ.தர்மிகா, மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை
39) செ.டிலக்ஷன், கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை
40) வி.தீபன்ராஜ், ஆனைப்பந்தி மெ.மி.வித்தியாலயம்
41) ஆ.அர்ச்சனா, உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்
42) ம.சசிராஜ், கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலயம்
43) சி.சிந்துபைரவி, துன்னாலை காசிநாதர் வித்தியாலயம்
44) இ.தர்சிகா, கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை
45) ப.விமல்ராஜ், பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலயம்
46) ம.சிவதரன், கரம்பொன் சிறியபுஷ்பம் மகளிர்மகா வித்தியாலயம்
47) டே.டக்ளஸ், யாழ்புனித ஜோண்பொஸ்கோ வித்தியாலயம்
48) பா.கிரிறாம், துன்னாலை காசிநாதர் வித்தியாலயம்
49) அ.பிரதீபன், யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை
50) கு.குபேரநாத், இணுவில் மத்திய கல்லூரி
51) ஜெ.நரேஷ், கோண்டாவில் இந்து மகாவித்தியாலயம்
52) கோ.தயாழினி, நெடுந்தீவு மங்கையர்க்கரசி வித்தியாலயம்
53) சி.மதனப்பிரியா, இந்துமகளிர் ஆரம்ப பாடசாலை
54) தி.கஜந்தன், காரைநகர் தியாகராசா மத்திய மகாவித்தியாலயம்.
55) சி.நவாஸ்கர், கரவெட்டி ஞானாசாரியார் கல்லூரி
56) சி.கோபிநாத், மானிப்பாய் விவேகானந்தா வித்தியாசாலை
57) யே.ஷரண்ஷியா, யாழ்புனிதஜோண் பொஸ்கோ வித்தியாலயம்
58) சி.பானுமதி, யாழ்.வ.வ.மெ.க.பாடசாலை
59) ஸ்ரீ.பிரசாந்தினி நெல்லியடி மெ.மி.த.க பாடசாலை
60) கு.பிரஜாத், வட்டு.யாழ்ப்பாணக் கல்லூரி
61) இ.இரேணுயா, சித்தன்கேணி ஸ்ரீ கணேசா வித்தியாலயம்
62) சி.சிவஜனனி, கோப்பாய் நாவலர் வித்தியாலயம்
63) செ.சுஜேனி, கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை
64) வி.சாரதாஜினி, யாழ்.கன்னியர்மடம் மகாவித்தியாலயம்.
65) யோ.ஜசித்தா, அராலி சரஸ்வதி மகாவித்தியாலயம்
66) க.பிரியங்கா, யாழ்.இந்து ஆரம்பபாடசாலை
67) க.வாசீசண், யாழ்புனிதஜோன் பொஸ்கோ வித்தியாலயம்
68) பா.விஷ்ணுப்பிரியன், கோப்பாய் நாவலர் பாடசாலை
69) ம.நிகிந்தன், கரவெட்டி ஞானாசாரியார் கல்லூரி
70) வை.மதுவந்தி, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி
71) நா.ராகுலன், யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை
72) த.கிருஷாளினி, யாழ்.புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்
73) ப.குபேரன், மல்லாகம் விசாலாட்சி வித்தியாலயம்
74) சி.சிந்துசன், திருநெல்வேலி இந்துதமிழ்க் கலவன் பாடசாலை
75) ம.தவநீதன், சாவகச்சேரி இந்து ஆரம்பபாடசாலை
76 இ.மேரி ஜென்சிகா, கரம்பொன் சிறியபுஷ்பம் மகளிர் மாகவித்தியாலயம்
77) க.பிருந்தன், இணுவில் மத்திய கல்லூரி
78) ஆ.சுபகா, யாழ்.இந்து மகளிர் ஆரம்ப' பாடசாலை
79) அ.கோபிநாத், கொக்குவில் சி.சி.த.க பாடசாலை
80) இ.மிருதுளா, தாவடி இ.த.க. பாடசாலை
81) வ.விகர்ணன், யாழ்.புனித ஜோண்பொஸ்கோ வித்தியாலயம்
82) த.ஜனநதனி, யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை
83) சொ.தருமதன், கோண்டாவில் இந்து மாகவித்தியாலயம்
84) தி.ஆன்கனிலி, யாழ்.புனிதஜோண்பொஸ்கோ வித்தியாலயம்
85) உ.சாழினி, கோப்பாய் நாவலர் வித்தியாலயம்
86) ச.கோகிலன், இணுவில் மத்திய கல்லூரி
87) சி.சிவப்பிரஷாந், யாழ்.புனித ஜோண்பொஸ்கோ வித்தியாலயம்
88) ந.சன்சிகா, யாழ்.புனித ஜோண்பொஸ்கோ வித்தியாலயம்
89) பு.குபேரன், றிபேர்க் கல்லூரி
90) தே.பவித்ரா, கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை
91) நா.சுபப்பிரகாஷ், கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலயம்
92) நி.பகீர்த்தன், கோப்பாய் றோ.க.த.க பாடசாலை
93) வி.நிதூசன், கைதடிகுருசாமி வித்தியாலயம்
94) வி.கிரிஜா, நீர்வேலி சீ.சீ.த.க பாடசாலை
95) சி.கபிலன், உடுவில் மகளிர் கல்லூரி
96) மு.பிரசாந், ஆனைப்பந்தி மெ.மி. பாடசாலை.
97) மோ.கிந்துஷா, கொக்குவில் சி.சி.த.க பாடசாலை
98) வே.ஜெயவதனி, மட்டுவில் கமலாசினி வித்தியாலயம்
99) சி.குகரஜீவன், ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயம்.
100) ஆ.நிறுஜன், மானிப்பாய் சென்றஆன்ஸ் பாடசாலை
101) நா.பிரகாஸ், நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலயம்
102) செ.அனுதர்சா, நெல்லியடி மெ.மி.த.க பாடசாலை
103) யோ.தர்சிகா, கொக்குவில் சி.சி.த.க பாடசாலை
104) செ.சிந்துஜன், வட்டு யாழ்ப்பாணக் கல்லூரி
105) இ.குபேந்திரன், யாழ்.மத்திய கல்லூரி
106) இ.ஆர்த்தியா, கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம்
107) மு.குணாதரன், துன்னாலை காசிநாதர் வித்தியாலயம்
108) ந.நிதர்ஷனா, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி
109) சி.யதுகுலன், இணுவில் மத்திய கல்லூரி
110) த.பிரியதர்சினி, புன்னாலைக்கட்டுவன் மகாவித்தியாலயம்
111) ச.கல்ப்பனா, ஆனைப்பந்தி மெ.மி.வித்தியாலயம்
112) சி.ரணுசியா, இணுவில் மத்திய கல்லூரி
113) ப.பிரதீபன், சந்திரபுரம் ஸ்ரீசோமாஸ்கந்த கல்லூரி
114) சு.பகீரதி, துன்னாலை காசிநாதர் வித்தியாலயம்
115) வா.நிவானி, உரும்பிராய் றோ.க.த.க பாடசாலை
116) ச.யோனி, உடுவில் மகளிர் கல்லூரி
117) கா.கவிவர்ணன், சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை
118) பா.சந்திரிகா, தேவரையாளி இந்துக்கல்லூரி
119) உ.ஜினோஜா, கொக்குவில் நாமகள் வித்தியாலயம்
120) சோ.சிந்துகேயன், யாழ்.மத்திய கல்லூரி
121) த.சுதர்சனா, அளவெட்டி அ.மி.த.க பாடசாலை
122) யோ.திருக்கணேசன், வல்வை அ.மி.த.க பாடசாலை
123) ப.ஆரணி, தாவடி இ.த.க. பாடசாலை
124) ந.நிருஜன், நவாலி சென்பீற்றர்ஸ் வித்தியாலயம்
125) சு.சூர்யா, உரும்பிராய் றோ.க.த.க பாடசாலை
126) து.சாயிவதனரூபன், துன்னாலை காசிநாதர் வித்தியாலயம்
127) ச.சமீரா, உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்
128) ஜெ.நிவிதா, யாழ்.இந்துமகளிர் ஆரம்பபாடசாலை
129) கி.கோபிகா, துன்னாலை காசிநாதர் வித்தியாலயம்
130) ச.சரணிகா, யாழ்.புனித ஜோண்பொஸ்கா வித்தியாலயம்
131) சி.சுமந்தன், யாழ்.இந்து ஆரம்பபாடசாலை
132) க.கீர்த்திகா, துன்னாலை காசிநாதர் வித்தியாலயம்
133) கே.சயந்தன் ஆனைக்கோட்டை றோ.க.த.க. பாடசாலை
134) பா.பிறேமஷியா, உரும்பிராய் றோ.க.த.க பாடசாலை
135) ஞா.தினேஸ்றைமன், உரும்பிராய் றோ.க.த.க பாடசாலை
136) கி.கார்த்திகா, யாழ் இந்து மகளிர் ஆரம்பபாடசாலை
137) தி.ஜிந்துரகன், யாழ்.புனிதஜோண் பொஸ்கோ வித்தியாலயம்
138) க.துவாரகன், யாழ்.இந்து ஆரம்பபாடசாலை
139) க.சாயிராம், உரும்பிராய் றோ.க.த.க பாடசாலை
140) மோ.விதூஷனன், துன்னாலை காசிநாதர் வித்தியாலயம்
141) கு.சென்போல், உரும்பிராய் றோ.க.த.க பாடசாலை
142) ந.அர்ச்சனா, துன்னாலை காசிநாதர் வித்தியாலயம்
143) மு.குணாதரன், துன்னாலை காசிநாதர் வித்தியாலயம்
144) அ.அனுஸ்ரிகா, உரும்பிராய் றோ.க.த.க பாடசாலை
145) கா.அகில்தரன், அச்சுவேலி மத்திய கல்லூரி
146) வி.கரிகாலன், அச்சுவேலி புனித திரேசா மகளிர்கல்லூரி
147) ஜெ.இந்திரபோஸ், அச்சுவேலி மத்தியகல்லூரி
148) யோ.தர்சிகா, அச்சுவேலி மத்தியகல்லூரி
149) இ.பிரதிகா, துன்னாலை காசிநாதர் வித்தியாலயம்
150) ம.எழில்வாணி, துன்னாலை காசிநாதர் வித்தியாலயம்
151) கி.மகாராஜ், துன்னாலை காசிநாதர் வித்தியாலயம்

**வினாத்தாள் 02இற்குரிய விடைகள்**

01) தமிழ் மொழி
02) வாழிய
03) அளந்திடும்
04) வண்மொழி
05) மணம் வீசி
06) வாழியவே
07) தமிழ் மொழி
09) மொழி
10) என்றென்றும்
11) தேசிய விளையாட்டு
12) சூடுமிதித்தல்
13) மீனவர்பாடல்
14) வில்லிசை
15) ஈக்கள்/நுளம்புகள்
16) வயிற்றோட்டம்/நெருப்புக் காய்ச்சல்
17) புல்புண்டுகள், பிற
18) பேணிகள், தகரங்கள் நீர்தேக்கங்கள்
19) கழிவுப் பொருட்களை கண்டபடி வீசுதல்
20) புறகள் பிடுங்காமை, தொழுவங்கள் அருகில் இருத்தல்
21) கொதிக்கவைத்தல், வடிகட்டுதல் போன்றவை
22) கியூலெக்ஸ்
23) முத்தையா முரளிதரன்
24) ரைட் சகோதர்கள்
25) சிறி ஜெவர்த்தனபுர
26) Ear
27) Post Box
28) CHURCH
29) NINE
30) நான் கடைக்குச் சென்று தேங்காய் வாங்கினேன்
31) கமலனும் ரகுவும பாடசாலை சென்று மைதானத்தில் விளையா`டினார்
32) அதிபர் பாடசாலை வந்து ஐப்பசி மாதம் ஆறாம் திகதி ஆசிரியர் தினம் என்றார்.
33) 12டசின்
34) 40
35) 5000.00
36) 48
37) 112ரூ 50சதம்
38) 150.00
39) 95.50
40) சீத்தை ஆயின் 97.00 பொலிஸ்ரர் ஆயின் 62.00

குறிப்பு:
இதற்கான விடைகளைவேறு தாளில் எழுதி 06.03.2002 இற்கு முன் எமக்குக் கிடைக்கத்தக்கதாக அனுப்பி வைக்கவும்

**கல்விப் பகுதி**
*வினாத்தாள் 02*
"வலம்புரி"
இல: 15, வெள்ளாந் தெரு
யாழ்ப்பாணம்.

மாணவர் முழுப்பெயர்:- ..........................................
சொந்த முகவரி:- ..........................................
கற்கும் பாடசாலை:- ..........................................

**இப்படிவத்தை வெட்டி உங்கள் விடைத்தாளுடன் தவறாது இணைத்து அனுப்பி வைக்கவும்.**

# மதனராஜா — நெப்போலியன் கையில் துப்பாக்கியுடன் நின்றனர்

## ரவிராஜ் எம். பி. சாட்சியம்

(யாழ்ப்பாணம்)
நாரந்தனையில் இடம்பெற்ற படுகொலைச் சம்பவத்தில் பாராளுமன்ற உறுப்பினர் மதனராஜாவும், நெப்போலியனும் கையில் துப்பாக்கியுடன் நின்றதை நேரில் கண்டேன்.

நாரந்தனைப் படுகொலைச் சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணை நேற்று முன்தினம் யாழ் நீதி மன்றில் இடம் பெற்றபோது பாராளுமன்ற உறுப்பினர் என். ரவிராஜ் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு சாட்சிய மளிக்கையில் மேலும் தெரிவித்ததாவது:-

மதனராஜா மற்றும் நெப்போலியனை எனக்கு ஏற்கனவே நன்கு தெரியும் நான் அப்போது யாழ் மாநகரசபை முதல்வராக இருந்தேன். இந்தப் படு கொலைச் சம்பவத்தில் இவர்கள் இருவரும் தொடர்புபட்டிருந்ததை நான் நேரில் கண்டேன் எனத் தெரிவித்தார்.

பொலிஸ் உத்தியோகத்தரான தர்மரட்ணம் தமிழ் வேந்தன் சாட்சியம் அளிக்கையில் நான் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜாவின் மெயப்பாது காவலனாகச் சென்றிருந்தேன். சம்பவதினம் அப்பகுதியில் 70தொடக்கம் 80வரையான இளைஞர்கள் நாங்கள் சென்ற வாகனத்தை வழிமறித்துத் தாக்கினார்கள்.

அப்போது அவர்களுடைய கையில் ஆயுதம் இருந்தது அவர்கள் எங்களைத் தாக்கவில்லை. சேனாதிராஜாவைத் தாக்கியபோதே நான் காயப்பட்டேன் என்றார்.

இச்சம்பவத்தில் காயமடைந்த வேலுப்பிள்ளை இலட்சுமணன் என்ற பொலிஸ் உத்தியோகத்தர் குறிப்பிடுகையில்.

நான் மாவை சேனாதிராஜாவின் மெய்ப்பாதுகாவலனாக சென்ற பொழுது அவரைத் தாக்கிய கும்பல் என்னையும் தாக்கியது. எங்களைத் தாக்கியவர்கள் ஈ.பி.டி.பி. குழுவினர் என பின்னர்அறிந்து கொண்டேன் என்று கூறினார்.

விசாரணை எதிர்வரும் 14ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இதேவேளை மதனராஜா எம்.பி அடுத்தமாதம் 4,5,6,7 ஆம் திகதிகளில் பாராளுமன்றத்துக்கு செல்லவுள்ளார்.

(ந5-10)

# இலைக் கஞ்சி வழங்கல்

(மந்திகை)
அரசின் நூறுநாள் வேலைத் திட்டத்தின் கீழ் பச்சிலைப்பள்ளி பிரதேசசபையில் இடம்பெயர்ந்துள்ள பளைப்பிரதேசத்தைச் சேர்ந்த போசாக்கு குறைந்த குழந்தைகளுக்கு இன்று நெல்லியடியில் உள்ள பிரதேச சபை அலுவலகத்தில் வைத்து இலைக்கஞ்சி வழங்கப்படவுள்ளது.

போசாக்கற்ற குழந்தைகளை தவறாது வந்து இலைக் கஞ்சியினை பெற்றுக் கொள்ளுமாறு பிரதேசசபை செயலாளர் கு.ந.பாலச்சந்திரன் அறிவித்துள்ளார். (உ-23)

## வாக்குச் சீட்டுக்கள் மார்ச் மாதம் விநியோகம்

(கொழும்பு)
அடுத்த மாதம் நடைபெறவுள்ள உள்ளூராட்சிமன்றத் தேர்தல்களுக்கான வாக்குச் சீட்டுக்களை விநியோகிக்கும் திகதிகளை தேர்தல்ஆணையாளர் தயானந்த திஸநாயக்கா அறிவித்துள்ளார்.

வடக்குக் கிழக்குத் தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் சகல அரசாங்க அலுவலகங்களுக்குமான தபால் மூலமான வாக்குச் சீட்டுக்கள் அடுத்தமாதம் முதலாம் திகதி முதல் விநியோகிக்கப்படவுள்ளன.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் தபால் மூலம் வாக்குச் சீட்டு விநியோகம் அடுத்த மாதம் 7 ஆம் திகதி இடம் பெறவுள்ளது.

தபால் மூல வாக்களிப்பு வடக்கு கிழக்கு மாகாணங்களில் அடுத்தமாதம், 13 ஆம் 14 ஆம் திகதிகளிலும்,

ஏனைய மாகாணங்களில் அரசாங்க அலுவலர்களுக்கான தபால்மூல வாக்களிப்பு அடுத்தமாதம் 7 ஆம் 8 ஆம் திகதிகளிலும் இடம் பெறவுள்ளதாகவும்தேர்தல்ஆணையாளர் மேலும் தெரிவித்துள்ளார். (வ)

## கடற்படை வசமிருந்த விளையாட்டு மைதானம் மாணவர் பாவனைக்கு

(ஊர்காவற்றுறை)
யாழ்/வேலணை சேர் வைத்தியலிங்கம் துரைசுவாமி மத்திய மகாவித்தியாலயத்தின் பிரதான விளையாட்டு மைதானத்தினை மாணவர்கள் பயன்படுத்த இலங்கை கடற்படையினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

மேற்படி பாடசாலையின் விளையாட்டு மைதானம் கடந்த 11வருடங்களாக பாதுகாப்புப் படையினரின் வசமிருந்ததமைகுறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இப்பாடசாலையின் மாணவர் விடுதியில், இலங்கை கடற்படையினரின் பிரதானமுகாம் அமைந்துள்ளது. (உ-75)

## திருட்டு

(ஊர்காவற்றுறை)
ஊர்காவற்றுறையில் உள்ள 'ஆறுமுகம் அன்சன்ஸ்' என்ற வர்த்தக நிலையம், ஊரடங்கு வேளை திருடர்களின் கைவரிசைக்கு உள்ளாகியுள்ளது.

சுமார் 50 ஆயிரம் ரூப பெறுமதியான பணம் மற்றும் பொருட்கள் இவ் வர்த்தக நிலையத்தில் திருட்டுப்போயுள்ளன. (உ-7)

## வீனஸ் வி க வெற்றியீட்டியது

(நவக்கிரி)
வலி கிழக்கு பிரதேச சபைக்குட்பட்ட பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் இடம் பெற்றுவரும் விளையாட்டுப் போட்டிகள் வரிசையில் அண்மையில் இடம் பெற்ற எல்லேப்போட்டியில் புத்தூர் வீனஸ் வி க. வெற்றியீட்டியது.
(உ-233)

## அடிப்படையுரிமை மீறல் 5 மனுக்களுக்கு அனுமதி

(கொழும்பு)
அத்துருகிரிய பாதுகாப்பு இல்லச் சம்பவம் தொடர்பான அடிப்படையுரிமை மீறல் மனுக்கள் ஐந்திற்கு மேல் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது. இதில் கண்டி பொலிஸ் அத்தியட்சகர் கே. உடுகம்பொல, பொலிஸ்மா அதிபர், சட்டமா அதிபர் உட்பட மேலும் சில பொலிஸார் எதிர்மனுதாரர்களாக குறிக்கப்பட்டுள்ளனர்.

இரகசியப் புலனாய்வு பிரிவினரான தம்மை பொலிஸார் சட்டவிரோதமாக கைது செய்தனரென்றும், கைது செய்வதற்கான காரணங்களைதனையும் தெரிவிக்க வில்லையென்றும், சட்டவிரோதமாக தம்மை தடுத்துவைத்தனரென்றும் மனுதாரர்கள் மனுவில் குறிப்பிட்டுள்ளனர்.

தமது அடிப்படை மனிதவுரிமைகள் மீறப்பட்டுள்ளன என்றும், உரிய நட்ட ஈடு வழங்குமாறும் அவர்கள் கட்டுள்ளனர். மனுதாரர்கள் சார்பில் சட்டத்தரணி எஸ். எல்.குணசேகர ஆஜராகியுள்ளார். (உ)

## நிறைகுறைந்த பாண் விற்பனை செய்தோர் நீதிமன்றில் ஆஜர்

(தென்மராட்சி)
நிறைகுறைந்த பாணைவிற்பனை செய்த இருவருக்கு மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் அண்மையில் தண்டம் விதிக்கப்பட்டது.

இதுபற்றித் தெரியவருவதாவது, யாழ்ப்பாணம் விலைக் கட்டுப்பாட்டு அதிகாரிகளால் இளவாலைப் பகுதியில் உள்ள பேக்கரி ஒன்று திடீர்பரிசோதனைக்கு உள்ளாக்கப்பட்ட போது பாண் நிறையில்20 கிராம் குறைவாக விற்பனை செய்யப்பட்டமை கண்டு பிடிக்கப்பட்டது.

இவர் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டதால் நீதவான் 500ரூபா தண்டம் விதித்தார்.

அதேசமயம், மருதனார் மடத்திலுள்ள தனியார் கடையொன்றில் விற்பனை செய்யப்பட்ட பாணில் 60கிராம் குறைவாக இருக்கக் காணப்பட்டது. இவரும் தனது குற்றத்தை ஒப்புக் கொண்டதால் இவருக்கு ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.
(உ-77)

## கூட்டம்

(நவக்கிரி)
கோப்பாய் பிரதேசசெயலர் பிரிவுக்குட்பட்ட இரண்டாம் கட்ட அபிவிருத்தித் தொண்டர்களுக்கானகூட்டம், நாளை வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
(உ-233)

## கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் இருவருக்குமுச்சக்கரவண்டி

அரசின் 100 நாள் வேலைத் திட்டத்தின் கீழ் சமூக சேவைகள் திணைக்களத்தினால் வழங்கப்படும் தையல் இயந்திரம் மற்றும் முச்சக்கர வண்டிகளைப் பெற கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் நால்வர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

க. மங்கையர்க்கரசி கல்வியங்காடு, த. பரமேஸ்வரி கோப்பாய் மத்தி ஆகியோர் தையல் இயந்திரத்தையும்,

வை. சின்னத்தம்பி ஊரெழு, சு. சுந்தரராசா வாதரவத்தை ஆகியோர் முச்சக்கர வண்டிகளையும் பெறவுள்ளனர்.

இன்று மு. ப 10.00 மணிக்கு யாழ். செயலகத்தில் வைத்து இவைவழங்கப்படவுள்ளன. (உ-23)

## கருத்தரங்கு

(கொழும்புத்துறை)
இவ்வாண்டு ஏப்ரல் மாதம் கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைக்கு கலை, வர்த்தகப் பிரிவுகளில் தோற்றவுள்ள மாணவர்களுக்கு இலவச இருநாள் கருத்தரங்கினை வடமராட்சி மனித முன்னேற்றநிலைய ஊக்குவிப்பாளர்கள் நடத்தவுள்ளனர்.

இக் கருத்தரங்கில் பங்குபற்ற விரும்புபவர்கள் புனித தோமையார் ஆலய பங்குப் பணிமனையில் பெயர்களைப் பதிவுசெய்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.
(உ-223)

## வடமராட்சியில் காய்ச்சல் தீவிரம்

(மந்திகை)
வடமராட்சிப் பகுதியில் காய்ச்சல் நோயின் தாக்கம் மீண்டும் தீவிரமடைந்து வருகின்றது.

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் 80 வரையான காய்ச்சல் நோயாளர் தங்கிச் சிகிச்சை பெற்று வருவதுடன்,

வடமராட்சிப் பகுதி வைத்தியசாலைகளில், தினமும் 20 வரையான, காய்ச்சலினால் பீடிக்கப்பட்ட சிறுவர்கள் அனுமதிக்கப்படுவதாகவும் தெரியவந்துள்ளது.

மலேரியாக்காய்ச்சல், நெருப்புக்காய்ச்சல் என்பனவே இவ்வாறு வேகமாகப் பரவி வருவதாக அறியப்பட்டுள்ளது.
(உ-23)

## 751 ஆம் இலக்க பேருந்து சேவை சீரில்லையாம் பயணிகள் அதிருப்தி

(வல்வெட்டித்துறை)
யாழ்ப்பாணம்- பருத்தித்துறைக்கு இடையிலான 751 ஆம் இலக்க பேருந்து சேவை சீரின்றிக் காணப்படுவதாக சம்பந்தப்பட்டவர்களால் புகார் தெரிவிக்கப்படுகின்றது.

இச்சீரற்ற பேருந்து சேவையால், பல்கலைக்கழக மாணவர்கள், ஆசிரியர்கள், அரச ஊழியர்கள் ஆகியோர் பெரிதும் பாதிக்கப்படுவதுடன்,

இப்பாதையூடாகச் செல்ய பருவச்சீட்டுப்பெற்றவர்களு கால் கடுக்கக் காத்து நின்றுவிட்டு தனியார் சிற்றூர்திகளில் பயணத்தைமேற்கொள்வதாகவும் கூறப்படுகிறது.

இன்னும் சிலர் வல்லைப் பகுதிக்கு வந்து 750 ஆம் இலக்க பேருந்தில் தமது பயணத்தைத் தொடர்கின்றனராம். (உ-217)

## நிர்வாகசபை தெரிவு

(சுண்டுக்குளி)
சுண்டுக்குளி கிறீன்ஸ் பீல்ட் சனசமூக நிலையம், கிறீன்ஸ் பீல்ட் விளையாட்டுக் கழகம் ஆகியவற்றின் நடப்பு ஆண்டிற்கான நிர்வாகசபைதெரிவு கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

தலைவராக யோ. வி. ஜீவராஜா, உபதலைவர்களாக பி. மைக்கல், எஸ். ஏ. மரியதாஸ், செயலாளராக அ. செல்வராசா, உப செயலாளராக ந. ஜெகன், பொருளாளராக ஆ. பிரான்சிஸ், விளையாட்டு செயலாளராக ரி. ஜெகன் ஆகியோரும் நிர்வாகசபை உறுப்பினர்களாக 7 பேரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (உ-3, 110)

## பயணிகள் கப்பல் சேவை வாரத்தில் மூன்றுதடவை நடத்த கோரிக்கை

(கொழும்பு)
திருகோணமலைக்கும் காங்கேசன்துறைக்கும் இடையில் பயணிகள் கப்பல் சேவையில் ஈடுபட்டுள்ள ''சிற்றிஒவ் றிங்கோ'' கப்பல்சேவையை வாரத்தில் மூன்று தடவைகள் நடத்து மாறுகோரி சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திற்கும் பிரதமருக்கும், கப்பல் கம்பனி முகவருக்கும் நான்கு தமிழ் கட்சிகளின் கூட்டமைப்பு ஏற்பாட்டாளரானஎஸ். ஜெயபாலசிங்கம் கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.

அக் கடிதத்தில் எஸ். ஜெயபாலசிங்கம் மேலும் தெரிவித்திருப்பதாவது,

சிற்றி ஒவ் றிங்கோவில் பயணம் செய்வோர் தொகை நாளுக்குநாள் அதிகரித்துக் கொண்டு வருவதால் மனிதாபிமான அடிப்படையில் பயணிகள் கப்பல் சேவையை வாரத்தில் மூன்று தடவைகள் நடத்தும்படியும் இதன் மூலம் வெளிநாடுகளில் இருந்து வரும் பயணிகள் சிரமம் இன்றி பயணம் செய்வதிற்கு உதவுமாறும் அக்கடிதத்தில் கேட்கப்பட்டுள்ளது. (ள)

## கசிப்பு உற்பத்தியாளரை தட்டிக் கேட்டவர் தண்டனைக்கு ஆளானார்

(கோப்பாய்)
கசிப்பு ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்ட சமூக முன்னோடி ஒருவர் திட்டமிட்டுப் பழிவாங்கப்பட்டுள்ளார்.

உரும்பிராய் கிழக்குப் பகுதியைச் சேர்ந்த கசிப்பு மற்றும் சமூகச் சீர்கேட்டு ஒழிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் பொது அமைப்பு ஒன்றின் செயலாளருக்குச் சொந்தமான வாழைத்தோட்டத்தில் நுழைந்த விஷமிகள் அவற்றை வெட்டிச் சாய்த்ததுடன்,

தோட்டத்தில் நாட்டப்பட்டிருந்த கரட் பயிர்களையும் நாசமாக்கியுள்ளதாகக் கூறப்படுகின்றது. (உ-79)

## தென்மராட்சி மாணவர்கள் நிலத்தில் இருந்து கற்கும் அவலம்

(தென்மராட்சி)
தென்மராட்சியில் மீளவும் இயங்க ஆரம்பித்துள்ள 28 பாடசாலைகளிலும் தளபாடங்கள் போதியளவு இல்லாமையினால் மாணவர்கள் நிலத்தில் இருந்தே தமது கல்வியைக் கற்று வருகின்றனர்.

இப்பாடசாலைகளில் 2000 ஆம் ஆண்டில் இருந்த தளபாடங்களில் 75சதவீத மானவை சேதமடைந்தும் காணாமலும் போயுள்ளன.

இதன் காரணமாக இப்பாடசாலைகளின் அதிபர்கள் தமது மாணவர்களுக்கான இருக்கைவசதிகளை ஏற்படுத்துவதில் பெரும் பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளனர்.

இதே சமயம், இப்பாடசாலைகளுக்கான மாணவர் வரவு அதிகரித்து வருவது குறிப்பிடத்தக்கது, (உ-77)

## அனுருத்தவின் புத்திரர்கள் மீது பல்வேறு குற்றச்சாட்டுக்களாம்

(கொழும்பு)
உடத்தலவின்ன படுகொலைகள் தொடர்பாக மட்டுமன்றி வேறு பல சம்பவங்கள் தொடர்பாகவும் தாம்அநுருத்தரத்வத்தையின் மகன்களான சாணக்க, லோகான் இருவரையும் விசாரிக்க வேண்டியிருப்பதாக சீ.ஐ.டீ. பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

தாம்பல சாட்சிகளின் வாக்கு மூலங்களை பதிந்து கொண்டுள்ளதாகவும் விசேட சீ.ஐ.டீ. பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இருவரையும் தெல்தேனிய மஜிஸ்ரேட் இணோக்கா ரணசிங்கா மார்ச் 4 ஆம் திகதி வரை றிமாண்டில் வைக்குமாறும், இவர்கள் மார்ச்4 ஆம் திகதி நடைபெறவிருக்கும் அடையாள அணி வகுப்பில் நிறுத்தப்பட வேண்டுமென்றும் உத்தரவிட்டுள்ளார்.
(உ)

அறிகொன்று அறியான் எனினும் உறுதி
உழையிருந்தான் கூறல் கடன்
- குறள்

# வலம்புரி

## -செல்வாக்கு குறையும்

அரசும் விடுதலைப் புலிகளும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ஏற்படுத்தி நிரந்தர யுத்த நிறுத்தத்தைக் கடைப்பிடிப்பது ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவிற்கு கடுப்பை ஏற்படுத்தியுள்ளதென்பதை கடந்த 24 ந் திகதிய ஆசிரியர் தலையங்கத்தில் ''ஜனாதிபதி சீற்றம்'' என எழுதியிருந்தோம். அதில் பிரதமர் ரணிலின் ஆட்சி ஆயுள் 365 நாட்களுக்கு மட்டுமே அவரின் கையில் பின்னர் ஜனாதிபதி சந்திரிகாவே அரசின் ஆயுளைத் தீர்மானிப்பார் எனக் குறிப்பிட்டிருந்தோம். அதற்கு அத்திவாரம் இடுமாற்போல் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் புலிகளுக்குச் சாதகமான பல விடயங்கள் இருப்பதாக ஜனாதிபதி முகாரி இசைக்கத் தொடங்கிவிட்டார்.

ஜனாதிபதியின் இக்குற்றச்சாட்டு, சமாதான முயற்சிகளில் ஜனாதிபதியின் நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளது. சிஹல உறுமய, ஜே.வி.பி போன்ற இனவாதக் கட்சிகள் சமாதான முயற்சிக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களையும், எதிர்ப்புக் கூட்டங்களையும் நடத்துவதற்குத் தயாராகிவருகின்ற போது, புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் விடுதலைப்புலிகளுக்குச் சாதகமான பல விடயங்கள் இருப்பதாக ஜனாதிபதி குற்றம் சாட்டியுள்ளமை இனவாதிகளின் இனத்துவேஷநடவடிக்கைகளைத் தூண்டி விடுவதாக அமையும்.

நாட்டின் அதி உச்ச பதவியை வகிக்கும் ஜனாதிபதி உயிரழிவைத் தடுக்கக் கூடிய புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு- நிரந்தர யுத்த நிறுத்தத்திற்கு எதிராக கருத்துக் கூறியிருப்பாராயின் அஃது நாட்டின் அழிவுக்கே வழி சமைக்கும். போரில்தமிழ்-சிங்கள அப்பாவி மக்களின் உயிரழிவைத் தடுப்பதற்காக நோர்வே உள்ளிட்ட சர்வதேச நாடுகள் சமாதானத்தை ஏற்படுத்த முயற்சி செய்யும் போது, ஜனாதிபதியின் கருத்து மேற்போந்தவாறு அமையுமாயின் உள்நாட்டில் மட்டுமன்றி ர்வதேசரீதியிலும் ஜனாதிபதி தனது செல்வாக்கை மதிப்பை கணிமாகக் குறைத்துக் கொள்வார்.

மறைந்தார் மாண்பு

# இந்து சமயப் பேரவையை ஆரம்பிக்க உதவிய அமரர் மகாலிங்கம் அதீத சேவையாற்றியவர்

சென்ற நூற்றாண்டின் நடுப்பகுதியில் இலங்கை சுதந்திரம் பெற்றது. அன்றிலிருந்து இனப்பிரச்சினையும் முளைவிட்டெழத் தொடங்கிவிட்டதென்றே கூறவேண்டும்.

பெற்ற சுதந்திரத்தைபேணி அனுபவிக்க முடியாதவகையில் நாட்டை மாறி மாறி ஆளும் ஆட்சியாளர்கள் இனப்பிரச்சினையைத் தீர்த்துவைப்பதற்காக நல்லதீர்வொன்றை முன்வைக்காத காரணத்தினால் நாட்டில் இடம் பெறும் போர் மக்களைப் பல்வேறு பட்டதுன்பங்களுக்குள்ளாக்கி அவர்களை ஏதிலிகளாய் அகதிகளாய் அலைந்து வாழச் செய்துவிட்டது. இவ்விதம் வாழும் பலர் வேற்று நாட்டுக்குச்சென்று அகதி அந்தஸ்துக்கோரி வாழ வேண்டியதாயும் விட்டது. இதனால் நம்மவரில் பலர் தமது பாரம்பரிய பண்பாடுகளை இழந்து வாழ வேண்டியதாயிற்று. இதனைக் கண்டு மனம் கலங்கியபடி வாழ்ந்ததோடு இதற்கேதும் தம்மால் இயன்றவற்றைச் செய்து விடவேண்டும் என்று எண்ணி அதற்கோர் செயல்வடிவம் கொடுக்கும் வகையில் சைவத்தமிழ் அறிஞர்களையும் ஆலய அறங்காவலர்களையும் சைவாபிமானிகளையும் அ[illegible]து இந்து சமயப் பேரவை அங்குரார்ப்பணம் செய்து வைக்க உதவி, இதனை இந்துக்களின் நலனுக்காகக் குரல் கொடுக்கும் காத்திரமான அமைப்பாக திகழச்செய்தவர்களில் ஒருவர் முன்னாள் பிரதேசச் செயலாளரும் இந்து சமயப்பேரவை முன்னாள் உபதலைவருமான அமரர் ஆறுமுகம் மகாலிங்கம் என்றால்மிகையாகாது. அத்தகைய பெருமகன் அமரத்துவம் அடைந்துஇன்றுடன்ஒராண்டு பூர்த்தியாகின்றது. அவருடைய சிந்தனைகளும் செயல்களும் என்றும் இளமை பெற்றே திகழ்கின்றன.

### விநாயகப் பெருமான் மீது ஆரா அன்பு கொண்டவர்

குப்பிளான் கிராமத்தில் 08.11 1941 ல் பிறந்தஅமரர் மகாலிங்கம் விநாயகப்பெருமான் மீது ஆரா அன்பு பூண்டவர்.

ஆரம்பக்கல்வியை குப்பிளான் விக்கினேஸ்வராக்கல்லூரியிலும் இடை நிலைக்கல்வியை சுன்னாகம் ஸ்கந்தவரோதயக்கல்லூரியிலும் பெற்றுக்கொண்டார். பாடசாலைக் கல்வி முடிந்தபின் பதுளையில் ஆசிரியராகத் தனது பணியைத் தொடங்கினார். 1961 ம் ஆண்டில் அரச எழுதுவினைஞர் சேவையில் இணைந்து கொண்டார் 1972ம் ஆண்டுமுதல் நிர்வாக அதிகாரியாக பதவிஉயர்வு பெற்றுள்ளார். இவர் கல்வி அமைச்சிலும் யாழ். கல்வித் திணைக்களத்திலும் கடமையாற்றியுள்ளார். 1980 களில் இருந்து நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபராகவும் உடுவில் உதவி அரசாங்க அதிபராகவும் கடமையாற்றினார். இலங்கை நிர்வாக சேவைப் போட்டிப்பரீட்சையில் சித்தி பெற்றுள்ளதுடன், கலைமாணி, முதுமாணிப் பட்டங்களையும் பெற்றுள்ளார். 1991 ல் இருந்து நல்லூர் பிரதேச செயலாளராகநியமனம் பெற்றார். இக்காலத்தில் நல்லூர் பிரதேசத்தில் சைவத் தமிழ்ப்பணிகளில் ஈடுபட்டு வந்தார். மீண்டும் உடுவில் பிரதேச செயலாளராக 1994 ல் இருந்து நியமனம் பெற்றார். சண்டிலிப்பாய், தெல்லிப்பழை, கோப்பாய் பிரதேசங்களின்பதில் பிரதேச செயலாளராகவும் பணிபுரிந்துள்ளார்.

### செயல்திறன் பெற்றவர்

இவர் தனதுசேவைக்காலத்தில் சமய, சமூகப்பணிகளிலும் ஈடுபட்டுவந்தார். தனது

**சி. சக்திகிரீவன்**
கௌரவ செயலாளர் இந்து சமயப் பேரவை

சாதுரிய பேச்சாற்றலினாலும் செயல்திறமையினாலும் போரினால்பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களைப் பெற்றுக்கொடுப்பதற்கு காரணராய் இருந்துள்ளார். பூட்டப்பட்ட வரலாற்றுப்புகழ் பெற்ற பல திருத்தலங்களை திறப்பதற்கும்புனர்நிர்மாணப் பணிகளை மேற்கொள்வதற்கும் பல்வேறு வகையில் உதவியுள்ளார்.

### இந்து சமயப்பேரவை அமைக்க உதவினார்

1990 ம் ஆண்டுக் காலப் பகுதியில் மீண்டும் நாட்டில் தொடர்ந்த போர் எமது மொழி, மதபாரம்பரிய பண்பாடுகளை முழுமையாக அழிக்கும் பாணியில் புதியதோர் வடிவம் பெற்றது. அக்காலப்பகுதியில் சாதாரண குடியிருப்புக்கள் மீதும் வழிபாட்டுத்தலங்கள்மீதும்பொது நிறுவனங்கள் மீதும்மக்கள்திரளும் இடங்கள் மீதும் கண்மூடித்தனமான ஷெல் வீச்சுக்களும் விமானத்தாக்குதல்களும் அதிகரித்துக்காணப்பட்டன. இத்தாக்குதல் ஒருபுறம் இருக்க ஏழ்மைநிலையில் வாழும் நம்மவரை மதம்மாற்றும் நடவடிக்கை தீவிரம் பெறத்தொடங்கியது.

மதம் மாற்று நடவடிக்கைகள் பற்றிப்பேசினால் தமிழர் ஒற்றுமை குலைந்துவிடும் எனும் மாயை கட்டவிழ்த்துவிடப்பட்டிருந்தது. இச்சூழ்நிலையில் 1992ம் ஆண்டு நல்லை ஆதீனத்தில் இந்துமயப்பேரவை ஸ்தாபிப்பதற்கு உதவிய பெருமை அமரர் மகாலிங்கத்தைச் சார்ந்துள்ளது.

### நீதிக்காகக் குரல்கொடுத்தவர்

இப்பேரவை ஸ்தாபித்த நாள் முதல் ஓய்வின்றி எமது மக்களின் நலனுக்காகவும், விடிவிற்காகவும் செயற்பட்ட சைவத்தமிழ் புரவலர்களுள் அமரர் மகாலிங்கம் முதன்மையானவர். அஞ்சா நெஞ்சமும் நேர்கொண்ட பார்வையும் நிமிர்ந்த நடையும் குழந்தை உள்ளமும் அநீதிகளைக்கண்டு சிங்கம் போல் கர்சிக்கும் பேச்சாற்றலும் படைத்த அமரர் தான் வகித்த பதவியையும்பொருட்படுத்தாது நாட்டில் நடைபெறும் அநீதிகளை பகிரங்க மேடைகள் தோறும் சாடினார்.


திருநெல்வேலி சைவ வித்தியாவிருத்திச்சங்கம், ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாசமுனிவர் ஞாபகார்த்தசபை, ஸ்ரீ ல ஸ்ரீ ஆறுமுகநாவலர் பணிமன்றம் போன்ற பல்வேறு அமைப்புக்களுடன் நிறைந்த தொடர்புடையவராகவே காணப்பட்டார்.

### சமயப்பணியோடு சமூகப் பணியும்

நமது சைவாலய நிர்வாகங்களுக்கிடையேயுள்ள பல்வேறுபட்ட பிணக்குகளைத் தீர்த்துவைப்பதற்காகவும் அவற்றினைத்தீர்க்க சம்பந்தப்பட்டவர்களுக்கு தகுந்த ஆலோசனைகளை வழங்குவதற்காகவும் பல திட்டங்களைத் தீட்டினார். அந்நோக்கில் ஆலய பரிபாலகர்களையும் தர்மகர்த்தாக்களையும் அந்தணர்களையும் சைவ ஆர்வலர்களையும் அழைத்து ஆய்வரங்குகளையும் மாநாடுகளையும் நடத்துவித்தார். இவ்வரங்குகளிளெல்லாம் அமரர் மகாலிங்கம் எமது மதத்தைக்காப்பாற்ற மேற்கொள்ளவேண்டிய பணிகளை தெளிவுறக்கூறுவார். ஆலயங்கள் பூசைவழிபாடுகளோடு தர்மப்பணிகளிலும் ஈடுபடவேண்டிய அவசியத்தை உணர்ச்சி ததும்பக் கூறுவார். இன்றையதொழில் நுட்ப யுகத்தில் ஆலயங்கள் சமயப்பணிகளோடு, சமூகப் பணியை இணைக்காது போனால் எமது மதம் பல நெருக்கடிகளை எதிர்நோக்கும் என்பதன் உண்மையை, விளக்குவார். எமது சைவாலய வளாகத்தில் புதியதோர்

(2ம் பக்கம் பார்க்க)

## சாயி அருளமுதம்



ஒரு ஆபரணமாக உருவெடுப்பதற்காக மூசை(மட்குகை) யையும், சுத்தியலையும், பட்டறையையும் பொன் எவ்வாறு எதிர்கொள்ளுகிறதோ அதே போல் விதியின் தாக்கங்கள் துரதிர்ஷடங்கள். கஷ்டங்கள் அனைத்தையும் வரவேற்றுஎதிர்கொள்ளுங்கள். அல்லது தனது இனிமையைப் பாதுகாத்து எல்லோருக்கும் உபயோகப்படும் வண்ணம் சர்க்கரையாக மாறும் கரும்பு எவ்வாறு துவைக்கும் கருவியையும், பிழியும் கருவியையும், தெளிக்கும் கருவியையும் உலர்த்தும் சாதனத்தையும் வரவேற்குமோ அதேபோல வரவேற்கவேண்டுமெனவும்கூறலாம், தமக்குஅடுக்கடுக்காக அல்லல்கள் ஏற்பட்ட போதிலும பாண்டவர்கள் பின்னடையவில்லை. பதிலாக அந்த இன்னல்கள் கிருஷ்ணரை நினைக்கவும், அழைக்கவும் தமக்கு உதவிபுரிந்தன என்று மகிழ்ச்சியடைந்தனர். பீஷ்மர்இறப்பதற்கு முன், அம்பினாலாக்கப்பட்ட படுக்கையில் சயனித்திருக்கும் போது, அவருடைய விழிகளில் நீர் நிரம்பியதைக் கண்ட அர்ஜுனன் அதற்குரிய காரணத்தை அவரிடம் வினவினான். அதற்கு பீஷ்மர் 'பாண்டவர்கள் அனுபவித்த துன்பங்களையெண்ணி எனது கண்களில் நீர் சொரிந்தது.' என விடையளித்தார். கலியுகத்தில் உள்ளவர்கள் ஒருபாடம் கற்பதற்காகவே இது செய்யப்படுகிறது. பலத்தையோ, பதவியையோ, செல்வத்தையோ என்றும் நாடக்கூடாது. எல்லாவற்றையும் கைவிட்ட நிலையில் இறைவனுடைய சித்தத்திற்கு அடிபணிந்து, அதன்பயனாக என்றும் மகிழ்ச்சியுடனும், நிலை குலையாமலும் இருக்க வேண்டும் என பீஷ்மர் மேலும் கூறினார்.

நன்றி
நாளாந்த நற்சிந்தனை



## தவக்கால கிறிஸ்தவ சிந்தனைகள் (16)

**தவக்காலம் - இரண்டாம்வாரம் (ஊதா)**
**திபா 1:1-6. "ஆண்டவரில் நம்பிக்கை கொள்வோர் பேறு பெற்றோர்."**

''கொடுத்ததெல்லாம் கொடுத்தார் ;யாருக்காக கொடுத்தார் ஒருவருக்கா கொடுத்தார் இந்த ஊருக்காகக் கொடுத்தார்'' என்கிறது திரைப்படப் பாடல். நிறைவான செல்வம் பெற்ற செல்வந்தன் மகிழ்வாக வாழ்ந்தது தவறில்லை. ஆனால் தன் காலடியில் கிடந்த ஏழையை ஏறிட்டுப் பார்க்காது, தான் பெற்ற நிறை வாழ்வை, வாழ்வில் ஏதுமில்லாத அவனோடுபகிராதது தான் பெருங்குற்றம். ''தான் பெற்றது எல்லாம் தனக்காக'' என்று எண்ணியதும் தான் பெற்றது பிறரோடு பகிர்வ ற்கே'' என்ற உண்மையை உணர்ந்து பகிர்ந்து வாழாத நிலைப்பாடே அவனுக்கு நிலைத்ததண்டனையாக மாறுகிறது. பெற்ற பெருவாழ்வைப் பிறருடன் பகிர்வோம். அதுவே நித்திய வாழ்வுக்குநம்மை இட்டுச் செல்லும் படிக்கட்டுக்களாகும்.

- காவலன்

யுத்தத்தால் அழிந்து போன சாவகச்சேரி நகர்ப் பகுதியில் சிரமதானப் பணி அண்மையில் மேற்கொள்ளப்பட்டது. பல்லாயிரக் கணக்கான மக்கள் நடமாடிய நகரின் மையத்தில் கனி பறிப்பாறின்றி பப்பாசி காய்த்து நிற்பதை முதலாவது படத்திலும், திரு. ரவிராஜ் எம்.பி, திரு. சுபத்திரன் மற்றும் முக்கியஸ்தர்கள் சிரமதானப் பணியில் ஈடுபட்டிருப்பதை இரண்டாவது படத்திலும் காணலாம்.





# யாழ். மேயர் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த அமைச்சர்கள், தமது வருகை குறித்து யாழ். மாநகர முதல்வர் என்ற வகையில் தனக்கு தெரியப்படுத்தாதது குறித்து, யாழ். மாநகர முதல்வர் எஸ். கந்தையன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

நகர பிதா என்ற அடிப்படையில் வெளிமாவட்டங்களில் இருந்து வரும் பிரமுகர்கள், நகரத்துக்குள் பிரவேசிப்பதற்கு முன் சம்பிரதாய பூர்வமாக முதல்வருக்கு தெரியப் படுத்த வேண்டும்.

இச் சம்பிரதாயத்தை அவமதிக்கும் வகையில் அண்மையில் யாழ். வந்த அமைச்சர் குழுவினர் நடந்துள்ளனரென்றும் மேயர் கந்தையன் கவலை வெளியிட்டுள்ளார். (இ)

## கண்காணிப்பு...

இப் பேச்சுவார்த்தையில் நிரந்தர யுத்தநிறுத்தம் தொடர்பாகவும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் முக்கிய அம்சங்கள் தொடர்பாகவும் விரிவாக ஆராயப்பட்டதுடன் அமுல்படுத்தும் போது எழும் பிரச்சனைகள் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டது.

ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்துடன் நடத்திய பேச்சுவார்த்தைகளை அடுத்து நாளை மறுதினம் (சனிக்கிழமை) சர்வதேச கண்காணிப்புக் குழுத் தலைவர் மேஜர்ஜெனரல் 'ரொன்ட் பியூறு ஹெல்டே கொழும்பு வரவுள்ளார்.

கொழும்புக்கு வருகை தரவுள்ள சர்வதேச' யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுத் தலைவர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவையும் ஜனாதிபதி சந்திரிக்காவையும் சந்திக்கவுள்ளார். இச்சந்திப்பினை அடுத்து அவர் உடனடியாகவே லண்டன் சென்று மீண்டும் அன்ரன் பாலசிங்கத்தை சந்திப்பார்.

இது இவ்வாறிருக்க புரிந்துணர்வு ஒப்பந்தம் தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகாவுக்கும் பிரதமர் ரணிலுக்குமிடையே ஏற்பட்டுள்ள கருத்து முரண்பாடுகளை அவதானித்து வருவதாகவும் கருத்து முரண்பாட்டை போக்குவதற்கு நோர்வே எந்தவிதமான சமரச முயற்சிகளிலும் ஈடுபடப் போவதில்லை என்றும் நோர்வேயின் வெளியுறவு அமைச்சின் பேச்சாளர் கார்ஸ்டன் லெப்சுபீக் தெரிவித்துள்ளார். (வ)

## 10 இந்திய...

ஊர்காவற்றுறைப் பொலிஸார் நேற்று முன்தினம் யாழ். நீதிமன்றில் ஆஜர்செய்தனர். இரு வாரங்களுக்கு பிரஸ்தாப மீனவர்களை நீதிமன்றக் காவலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார். இதேவேளை இதுவரை யாழ். சிலையில் 20 இந்திய மீனவர்கள் தடுத்துவைக்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

# சிப்பாய் தற்கொலை

(ஏழாலை)

காங்கேசன்துறை இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவச் சிப்பாய் ஒருவர் தன்னைத் தானே துப்பாக்கியால் சுட்டுத் தற்கொலை செய்துள்ளார்.

கடந்த திங்கள் இரவு இடம் பெற்ற இச்சம்பவத்தில் வசந்த சாந்தகுமார ஜெயக்கோன் (வயது 22) என்ற சிப்பாயே தற்கொலை செய்து கொண்டவராவார்.

பிரஸ்தாப சிப்பாய் முகாம் விடுதிக்கு முன்பாக தன்னைத் தானே சுட்டுத் தற்கொலை செய்து கொண்டுள்ளார் என காங்கேசன்துறைப் பொலிஸாரால் மல்லாகம் மாவட்ட நீதிமன்றுக்கு அறிவிக்கப்பட்டது. இதனை அடுத்து சம்பவ இடத்திற்கு நீதிபதி பா. சுப்பிரமணியம் நேரில் சென்று பார்வையிட்டார். (இ-12)

# சேமலாப நிதியை மாவட்ட ரீதியில் பெறமுடியும்

(கொழும்பு)

ஊழியர் சேமலாபநிதியை (இ.பி.எவ்) அந்தந்த மாவட்ட தொழில் அலுவலகங்களில் பெற்றுக்கொள்ள முடியும் என்று தொழில் வேலை வாய்ப்பு அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

ஊழியர் சேமலாப நிதியை மீளப் பெற்றுக் கொள்வதற்காக ஆயிரக்கணக்கானோர் தினமும் கொழும்புக்கு வரவேண்டியுள்ளது. இதனால் அவர்கள் பல சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இத்தகைய சிரமங்களை தவிர்ப்பதற்காக அவர்களது சேமலாப நிதியம் அந்தந்த மாவட்டங்களில் பெற்றுக் கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் சமரசிங்கா மேலும் தெரிவித்துள்ளார். (வ)

# மாநகர சபை மாதாந்த கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகர சபையின் மாதாந்தக் கூட்டம், மாநகர முதல்வர் எஸ். கந்தையன் தலைமையில், இன்று முற்பகல் 10 மணிக்கு நல்லூர் இந்து விடுதியில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்திற்கு மாநகர சபை உறுப்பினர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு முதல்வர் கேட்டுள்ளார். (இ)

# தென்பகுதி பல்கலை மாணவர் வருகை

(காரைநகர்)

தென்பகுதி பல்கலைக்கழக மாணவர் குழு, நேற்று காரைநகர் பகுதிக்குச் சென்று, அப்பகுதிகளைச் சுற்றிப் பார்வையிட்டதுடன், மக்களுடனும் கலந்துரையாடியுள்ளனர்.

இம் மாணவர் குழுவுடன் கடற்படை அதிகாரிகளும் வருகை தந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-246)

# சுற்றுலாப்பயணம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக பொருளியல், சமூகவியல், வரலாறு சிறப்புத்துறை இறுதிவருட மாணவர் குழுவொன்று தென்னிலங்கைக்குச் சுற்றுலாவை மேற்கொண்டு இன்று கொழும்பு பயணமாகின்றது. இவர்களுடன் விரிவுரையாளர்களும் உடன் செல்கின்றனர். (ந)

# சாவகச்சேரிக்கு அமைச்சர் விஜயம்

(வண்ணார்பண்ணை)

சாவகச்சேரி நகரப் பகுதிக்கு நேற்று விஜயம் செய்த இந்து கலாசார அமைச்சர் தி. மகேஸ்வரன், சந்தை மற்றும் நகரப் பகுதிகளைச் சுற்றிப் பார்வையிட்டார்.

இதேவேளை தென்மராட்சி கமநல சேவை நிலையம் மற்றும் தென்மராட்சி பிரதேச செயலகம் ஆகியவற்றின் திறப்பு விழாவிலும் அமைச்சர் கலந்து கொண்டார். (இ-109)

## புரிந்துணர்வு...

விடயங்கள் இருக்கத்தான் செய்கின்றன. இது தொடர்பாக நான் நியமித்த குழு அறிக்கை சமர்ப்பித்த பின் அது தொடர்பாக அறிக்கை விடப்படுமென்றும் அவ்வறிக்கையில் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இதேவேளை அரசு விடுதலைப் புலிகளுடன் செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு எதிர்க்கட்சிகளின் பூரண ஆதரவு இருக்குமென்று எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (வ)

## உண்ணாவிரதக்...

வட்டாரங்கள் தகவல் வெளியிட்டு[illegible] போதிலும் தமது கோரிக்கை[illegible] நியாயமான தீர்வு கிடைக்கும் வ[illegible] தமது உண்ணாவிரதப் போராட்[illegible] தொடரும் என்று கைதிகள் தரப்[illegible] தெரிவிக்கப்பட்டுள்ளது.

தம் மீதான வழக்கு விசா[illegible]ணை எடுத்துக் கொள்ளப்பட வேண்டு[illegible] அல்லது விடுதலை செய்யப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுத்[illegible] உண்ணா விரதப் போராட்டத்தை[illegible] கைதிகள் ஆரம்பித்திரு[illegible] இதில் ஏற்கனவே இருவர் [illegible] முற்று யாழ். போதனா [illegible] சாலையில் அனும[illegible] பட்டமையும் இங்கு குற[illegible] தக்கது. ([illegible])


# இதய அஞ்சலி

அல்வாய் பாரதிதாசன் சனசமூக நிலையத்தின் தலைவரும், உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியின் அதிபருமாகிய

திரு. கி. நடராசா

அவர்களின் அன்புத் தந்தையார்

ஆள்வாப்பிள்ளை கிருஷ்ணபிள்ளை

அவர்களின் மறைவையொட்டி எமது இதய அஞ்சலியைத் தெரிவிப்பதோடு அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவிக்கின்றோம்.

– பாரதிதாசன் சனசமூக நிலையம் –

அல்வாய்.

[C/3603]

# முதலாவது நினைவஞ்சலி

மலர்வு 26 – 03 – 1922



உதிர்வு 11 – 03 – 2001

திருமதி. திரவியம் வீரசிங்கம்

உரும்பிராய் தெற்கு.

திதி: 28 - 02 - 2002

நங்கை புகழ் சொலற்கரிதே


தெய்வமகள் வீரசிங்கம் திருமனையாள் திரவியம் பேர்
மெய்மைபெற சிவனடியைச் சேர்ந்தனரே ஓராண்டு
தை(தெ)விகமாய் ஓடிற்றே, சந்ததமுஞ் சார்ந்தவர்கள்
நைகரமோ சொலற்கரிதே, நங்கைபுகழ் பெரிதன்றோ!

30, Kings Court,
Wantirana South,
Victoriya 3152,
Australia.

நீங்காப் பிரிவால் துயருறும்,
கணவர், மக்கள், மருகர்,
பேரர், சகோதரர்.

[474[illegible]

# பாராட்டி வாழ்த்துகிறோம்



யா/ கோண்டாவில்
பரஞ்சோதி வித்தியாலய
அதிபர்

திரு. சுப்பையா சண்முககுமார்

அவர்கள்

யாழ். பல்கலைக்கழக கல்வி முதுமாணி (M.Ed) பரீட்சையில் சித்தியடைந்ததையிட்டு எமது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்து, இவர் மென்மேலும் கல்வியில் சிறந்து விளங்கி கல்விச் சமூகத்திற்கு சேவையாற்ற இறைவனை வேண்டுகின்றோம்.

– பாடசாலைச் சமூகம் –

யா/ கோண்டாவில் பரஞ்சோதி
வித்தியாலயம்,
கோண்டாவில்.

[4744]

அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு........



# அர்ச்சனா ஜுவலர்ஸ்

118, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 176/1, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.


இப்பத்திரிகை வலம்புரி அன் கோ ஸ்தாபனத்தினால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.02.2002ல் அச்சிட்டு வெளியிடப்ப[illegible]